# எலியாவும் போஜன-பலியும்

ஓ, அது உண்மையல்லவா! “கர்த்தாவே, நான் பெற்றுக்கொள்கிறேன்.” எதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்? அவர் அளித்துள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும், அது என்னுடையது.

2 இப்பொழுது, நாம் அமருவதற்கு முன்பு, நான் இங்கே இந்தக் கைக்குட்டைகளுக்கு ஜெபிக்க மறக்காதபடிக்கு நாம் நம்முடைய தலைகளைச் சற்று நேரம் வணங்குவோமாக.

3 எங்கள் கர்த்தாவே, சீயோனின் பாடல்களுக்காக நாங்கள் இன்றிரவு உமக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம், பழங்காலத்து நாகரீகமான சுவிசேஷம் எங்களுடைய இருதயங்களை தீமையிலிருந்து சுத்திகரிக்கிறது, ஏனென்றால், வேதாகமத்தில் உள்ள மிகவும் கிருபையுள்ள வாக்குத்தத்தங்கள் எங்களுடையவைகளே. விசுவாசத்தினாலே நாங்கள் அவைகளை ஏற்றுக்கொள்கிறோம். தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்பதை நாங்கள் அறிவோம். பவுல் வாழ்ந்த அந்தச் சந்ததியில், ஜனங்கள்…அநேகர் சுகவீனமாயிருந்தனர். அவன் அவைகளை தன்னுடைய சரீரத்தின் மேல் போடும்படியாக, அவர்கள் உறுமால்களையும், கச்சைகளையும் அவனிடத்தில் கொண்டு வந்தனர், அதன்பின்னர் அவனுடைய சரீரத்திலிருந்து வியாதியஸ்தர்களுக்கும், அவதியுறுவோருக்கும் கொண்டு செல்லப்பட்டது. கர்த்தராகிய இயேசுவின் பேரில் கொண்டிருந்த அவர்களுடைய விசுவாசத்தினிமித்தம், அசுத்த ஆவிகள் ஜனங்களை விட்டுச் சென்றதாகவும், துன்பங்கள் அவர்களை விட்டு நீங்கின என்றும் வேத வாக்கியங்கள் நமக்குச் சொல்லுகின்றன. தேவனே, பவுல் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக, உமது பிரசன்னத்திற்குள் சென்றுவிட்டான். அந்தச் சந்ததி அவனோடு கடந்து சென்றது, ஆனால் நீரோ ஒவ்வொரு தலைமுறைக்கும் தேவனாயிருக்கிறீர். இப்பொழுது ஜனங்கள், இன்றிரவு, உம்மை விசுவாசித்திருக்கிறார்கள், நாங்கள் இன்றிரவு, இந்தக் கைக்குட்டைகளையும், சிறு பொட்டலங்களையும் உம்மிடம் ஒப்படைக்கிறோம், எங்கள் ஜெபத்திற்கு நீர் பதிலளிப்பீர் என்றும், அவர்கள் குணமடைவார்கள் என்றும் எங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறோம். கர்த்தாவே, அதை அருளும். நாங்கள் அதைத் தேவனுடைய மகிமைக்காக, அவருடைய குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் அவர்களுக்கு அனுப்புகிறோம். ஆமென்.

4 நீங்கள் அமரலாம். இந்த ஆராதனை முடிவடைந்தவுடன் இவைகளை உடனடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்.

5 இன்றிரவு நான் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன். நான் கலந்துகொள்ள வேண்டிய நேர்காணல்கள் முடித்தவுடனேயே, இன்று

அந்த மலைக்கு அப்பால் சென்று ஜெபம் செய்தேன். ஒவ்வொரு முறையும் நான் இந்தப் பாலைவன வெயிலில் செல்லும்போது, அது ஒருவிதமாக அதிகமாகத் திரும்பி வர வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது. ஆனால் இன்றிரவு நான் ஒரு காரியத்தைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன், என் மனைவி…நாம் எவ்வளவு ஒன்றாக இருந்திருக்கிறோம், மேலும் தேவனுடைய மகத்தான தரிசனங்கள் வெளிப்படுவதையும், நிறைவேறுவதையும் அவள் கண்டிருக்கிறாள். கர்த்தருடைய தூதன் முதன்முதலில் தோன்றிய அந்த நாளில், அவள் ஜெபர்சன்வில்லில் உள்ள ஆற்றங்கரையில் இருந்தாள், அந்தச் செய்தி நாடு முழுவதும் அசோசியேட்டட் பிரஸ் மூலம் வெளியிடப்பட்டது. அது…அது 1933-ஆம் ஆண்டு. அவள் அங்கே நின்று கொண்டிருந்தாள், ஆனால் அவள் அந்தச் சத்தத்தைக் கேட்டாள், ஆனால் அந்த ஒளியைக் காணவில்லை. செய்தித்தாளில் புகைப்படம் எடுப்பவர்களும் கூட அந்த ஒளியைக் கண்டனர். ஆனால் அப்பொழுது அவள் மிகவும் வாலிபமாயிருந்தாள், அவள் ஏறக்குறைய பன்னிரண்டு வயதுடையவளாய் இருந்தாள், அவள் அந்த ஒளியைக் கண்டதேயில்லை. அவள் ஜனங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள், அநேகர் மயக்கமடைந்து கொண்டிருந்தனர். அது ஏறக்குறைய ஒரு நிமிடம் அப்படியே நிலைத்திருந்து, அதன்பின்னர் அது மீண்டும் ஆகாயத்தை நோக்கிச் சென்றது. “ஞானஸ்நானம் கொடுக்கும்போது, ஒரு உள்ளூர் பாப்டிஸ்டு ஊழியக்காரன் மேல்— மேல் வினோதமான ஒளி தோன்றுகிறது” என்று செய்தித்தாள்கள் ஒரு பெரிய கட்டுரையை வெளியிட்டன. கனடா வரை சென்று, கனடா பத்திரிகையில் இடம்பிடித்தது.

6 அதன்பின்னர் சுமார் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, நான் கடந்த முறை பீனிக்ஸில் இருந்தபோது, சகோதரன் ஜேக் மூர் என்னோடு இருந்தார் என்று நான் நினைக்கிறேன், அவர் ஒருவிதமாக…என் மனைவி மிகவும் பயந்த சுபாவம் கொண்டவள். எனவே அவர் எதிர்பாராதவிதமாக அவளை மேடைக்கு அழைத்தார், அதனால் அவள் மயங்கிவிடுவது போல இருந்தாள். நான் ஏற்கனவே மேடையின் மேல் ஏறியிருந்த பிறகு அவள் வந்தாள், அங்கே ஒரு சுகமளிக்கும் ஆராதனைக்கான அபிஷேகம் இருந்தது. மேலும், அவள் அந்தவிதமாக அங்கே அந்தப் பிரசன்னத்தில் இருந்தாள் என்று அவள் கூறினாள். மேலும், நேற்று முந்தின இரவு, அவள் மேடையின் மேல் அவரைக் கண்டாள், அவர் இங்கே மேடையின் மேல் நின்றுகொண்டிருந்தபோது, அவள் அவரை முதன்முறையாகக் கண்டாள். நான் அவளை வெளியே சந்தித்தபோது அவள்… அவளுடைய கண்களில் கண்ணீர் வடிந்தது. அவள், “பில்லி, என் ஜீவியத்தில் முதன்முறையாக, நான் அதைக் கண்டேன்” என்றாள். அவள், “நான்…நீங்கள் ஒரு ஸ்திரீக்காக ஜெபித்துக் கொண்டிருந்தீர்கள்,” “அது அவளுக்கு முன்பாக வந்து ஒரு சில விநாடிகள் அங்கேயே நின்று, நீர் இருந்த இடத்தைச் சுற்றி

நகர்ந்து வந்ததை நான் கண்டேன். அதன்பின்னர், நீங்கள் பேசுவதை நிறுத்தியவுடனே, அது போய்விட்டது" என்றாள். எனவே அது அவளுடைய கண்களுக்கு முன்பாக வந்ததற்காக, நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். பாருங்கள், அந்தச் சிறிய பெண்மணிக்கு அநேக காரியங்கள் கடந்து செல்ல இருக்கின்றன, எனவே நான் அதற்காக மகிழ்ச்சியும், சந்தோஷமும் அடைகிறேன்.

7 இப்பொழுது, நாளை இரவு சுகமளிக்கும் ஆராதனை உள்ளது. இந்த வாரம் வெள்ளிக்கிழமை இரவு சுகமளிக்கும் ஆராதனைகள் நடைபெறும் என்று நாங்கள் கூறி வந்தோம் என்பதை, நீங்கள் அறிவீர்கள். இப்போது, நாளை மதியம் அல்லது—அல்லது மாலை சுமார் ஆறு மணிக்கு வாருங்கள், அப்போது நீங்கள் ஆராதனையின் மற்ற பகுதிகளைத் தொந்தரவு செய்ய மாட்டீர்கள். பில்லி, லியோ, ஜீன் இன்னும் மற்றவர்களும் உங்களுக்கு ஒரு ஜெப அட்டையை அளிக்க, ஜெப அட்டைகளோடு இங்கு இருப்பார்கள். அப்பொழுதுதான் நாம் ஜனங்களை மேடையின் மேல் கொண்டு வந்து, அவர்களுக்காக ஜெபிக்கிறோம். இப்பொழுது நாம்... நான்...நான் அமெரிக்க கூட்டங்களை நடத்த ஜனங்களுக்குப் போதிக்கப்பட்டுள்ள விதத்தில், கரங்களை வைக்க வேண்டும். இப்பொழுது, அது—அது வேதவாக்கியம், ஆனால் அது ஒரு யூத பாரம்பரியம். அது புறஜாதிகளுக்கானதல்ல, ஆனால் புறஜாதிகள் அதைக் கொண்டு செல்கிறார்கள். புறஜாதியானோ, "நீர் என் கூரையின் கீழ் வர நான் பாத்திரன் அல்ல, வார்த்தையைப் பேசும், என் ஊழியக்காரன் பிழைப்பான்" என்றான். அது உண்மை. ஆனால் யூதனோ, "என் மகள்மேல் வந்து உமது கரங்களை வையும், அவள் பிழைப்பாள்" என்றான். பாருங்கள், அது அவர்களுடைய பாரம்பரியமாயிருந்தது, அது புறஜாதிகளுக்கானதாயிருக்கவில்லை.

8 ஒவ்வொரு இரவும், ஒவ்வொரு மணி நேரமும், இரவும் பகலும் பரிசுத்த ஆவியானவர் வந்து, வெளிப்படுத்தி, கட்டிடத்தினூடாகச் சென்று, இருதயங்களின் இரகசியங்களைப் பேசுகிறார். நீங்கள் அதை எல்லா நேரத்திலும் காண்கிறீர்கள். கர்த்தருடைய பிரசன்னம் இங்குள்ளது என்பதை நீங்கள் அறிந்து கொள்வதற்காகவே அது உள்ளது. இப்பொழுது, நீங்கள் அதை ஏற்றுக்கொண்டால், அப்பொழுது நீங்கள் சுகமடைவீர்கள். ஏனென்றால் உங்களுக்காக எப்பொழுதும் செய்யப்பட வேண்டிய எல்லா சுகமளித்தலும் ஏற்கனவே முடிந்து விட்டது, அது ஆயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. நீங்கள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளவிருக்கும் எல்லா இரட்சிப்பும் ஏற்கனவே கிரயமாகச் செலுத்தப்பட்டுவிட்டது, அதைப் பெற்றுக்கொள்வது உங்களுடையதாயுள்ளது. அது உங்களுக்கு இரட்சிப்பாக மாறி ஆயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக ஆகிவிட்டன. ஆனால் இப்பொழுது கூட்டங்களில் நீங்கள் என்னைக் கவனியுங்கள், நான், "அது உங்களை விசுவாசிக்கச் செய்யுமா?"

என்று கேட்கிறேன். பாருங்கள், அடையாளங்களும் அற்புதங்களும் சுகமளித்தலுக்காகவோ அல்லது இரட்சிப்பிற்காகவோ அல்ல, ஆனால் தேவனுடைய பிரசன்னம் இங்குள்ளது என்பதை ஜனங்கள் உணர்ந்து புரிந்துகொள்வதற்காகவே இது. அப்படியானால் அவர்… அவர்…அது எப்படியிருக்கும், அதைக் காட்டிலும் அது ஒரு அற்புதமாயுள்ளது. நாம் இப்பொழுது எளிமையாக அற்புதங்களைக் காணத் துவங்கிவிட்டோம்.

9 இப்பொழுது அது ஒரு நபரைக் குறித்து வரும்போது, அவர்களில் அநேகர் அங்கே படுக்கைகளிலிருந்து எழும்பினர், சக்கர நாற்காலிகளையும் மற்றக் காரியங்களையும் கொண்டு வெளியே செல்லலாம். அது சரியாக ஒரு அற்புதம் அல்ல. இல்லை. பாருங்கள், கிறிஸ்தவ விஞ்ஞானமும் கூட அதைக் கொண்டுள்ளது. அது ஒரு—ஒரு—ஒரு மனோதத்துவ நிலையில் நீங்கள் இருக்கலாம்… உங்களுடைய சிந்தனை முறையை மாற்றலாம். இப்பொழுது, அது இருந்தது என்று நாம் நம்புகிறதில்லை, ஏனென்றால் அது விசுவாசமாயிருந்தது என்று நான் நம்புகிறேன். ஆனால் இன்னும்…

10 நான் பிரான்ஸில் உள்ள லோரெய்னில் உள்ள லா சால் என்ற இடத்தில் இருந்தேன். நான் பாரிஸில் இருந்தேன். நான் ஒரு இடத்திற்கு சென்றேன், அங்கே அவர்கள் ஒரு மரித்த ஸ்திரீயை வைத்திருந்தார்கள். அவள் அடக்கம் பண்ணப்பட்டிருந்தாள் அவர்கள் அங்கே ஒரு கல்லைத் தேய்த்தார்கள்; ஊனமுற்றோர் ஊன்றுகோல்களுடன் உள்ளே சென்ற மக்கள், அவற்றைக் கீழே வைத்துவிட்டு, அந்த இறந்த பெண்ணின் மீது கல்லைத் தேய்த்துக் கொண்டிருந்த பிறகு நடந்து சென்றார்கள். பாருங்கள், அவள் மரித்துவிட்டாள், அவளால் இதற்கு மேல் பரிந்து பேசவும் முடியாது…தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஒரே ஒரு மத்தியஸ்தர் மாத்திரமே உண்டு, அவர் கிறிஸ்து இயேசு ஆவார். ஒரு கத்தோலிக்க குடும்பத்திலிருந்து வந்த நான்—நான் அவர்கள் மரிக்கும் ஜனங்களை விசுவாசிக்கிறார்கள் என்பதை அறிவேன், அதாவது அவர்களுடைய ஆவிகள் அவர்களுக்காகப் பரிந்து பேசுகின்றன; சில அரசியலுக்காகவும், சில மற்ற காரியங்களுக்காகவும், வித்தியாசமானவைகளாக இருக்கின்றன. என்னைப் பொறுத்தமட்டில், அது ஆவியுலகத் தொடர்புக்குரியக் கொள்கையாகும். நான் உங்களுடைய உணர்வுகளைப் புண்படுத்தவில்லை என்று நான் நம்புகிறேன், ஆனால் நான் நேர்மையாயிருக்க வேண்டும். பாருங்கள், மரித்தோரோடு பரிந்து பேசுகிற எந்தக் காரியமும் ஆவியுலகத் தொடர்புக்குரியக் கொள்கையாக இருக்கிறது.

அவர்கள் மெக்சிகோவில் என்னிடம், "இயேசுவைக் குறித்து என்ன?" என்று கேட்டனர்.

11 நான், "அவர் மரிக்கவில்லை. அவர் மீண்டும் உயிரோடெழுந்தார், அவர் என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறார்"

என்றேன். பார்த்தீர்களா? அவர் மரித்துவிடவில்லை, அவர் ஜீவிக்கிறவராயிருக்கிறார். அவர்களில் மீதமுள்ளவர்கள் கடந்துபோயிருக்கிறார்கள், என்றும், “அங்குள்ளவர்கள் இங்கு வர முடியாது, இங்குள்ளவர்கள் அங்குச் செல்ல முடியாது” என்று வேதம் கூறுகிறது. எந்த மனிதனும் ஒருபோதும் கடந்ததில்லை, இனிமேலும் கடந்து செல்லவும் மாட்டான். இயேசு அவ்வண்ணமாய்க் கூறினார் என்றால்…அதுவே இதற்குத் தீர்வாகிறது.

12 ஆனால் இந்தக் காரியங்கள் கிரியை செய்கிறதை நாம் கண்டறிகிறோம். ஆகவே, இப்பொழுதும் ஒவ்வொரு இரவும் பரிசுத்த ஆவியானவர், ஒரு மனிதனின் பிரசன்னத்தை அல்ல, இங்கு அவர் இருக்கிற பிரசன்னத்தை, உங்களுக்குக் கொண்டுவர முயற்சிக்கிறார். ஒரு மனிதன் தன்னைத் தாழ்த்திக்கொண்டு, ஒரு வரத்தின் மூலம், தேவனை உங்களுக்குத் திறக்கக்கூடிய ஆவியின் ஒரு குறிப்பிட்ட தளத்திற்குள் தன்னை ஒப்புக்கொடுக்க முடியும். ஆனால் நீங்களாகவே அதை விசுவாசித்து, அதை ஏற்றுக்கொள்ளும் வரை அது ஒருபோதும் கிரியை செய்யாது, அப்பொழுது அது கிரியை செய்கிறது. பாருங்கள், நீங்கள் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களானால், நீங்கள் ஒவ்வொருவரும்—நீங்கள் ஒவ்வொருவரும் அவிசுவாசத்தில் இருந்தால் அதைக் குறித்த ஒரு வார்த்தையையும் விசுவாசிக்காவிட்டால், அது ஒருபோதும் கிரியை செய்யாது.

13 இயேசு, அவர் தம்முடைய சொந்த கூட்டத்தினிடமும், தம்முடைய சொந்த தேசத்திற்கும் சென்றபோது, அவர்களுடைய அவிசுவாசத்தின் காரணமாக அவரால் அநேக வல்லமையான கிரியைகளைச் செய்ய முடியவில்லை. அப்பொழுது அவரால் அதைச் செய்ய முடியவில்லையென்றால், அவிசுவாசத்தின் நிமித்தமாக, அவரால் அதை இப்பொழுது செய்ய முடியாது. பாருங்கள், அது உங்களுடைய விசுவாசம்.

14 ஆகவே, இந்தக் காரியங்கள் நிறைவேற, நீங்களும் நானும் பரிசுத்த ஆவியானவருடன் சேர்ந்து செயல்பட வேண்டும்; தமது வார்த்தையைக் காக்கிற தேவன் இங்கே இருக்கிறார் என்று நான் களிகூரவும், நீங்கள் களிகூரவும் இது வழிவகுக்கும்.

15 ஆனால், கடைசி நாட்களில் நடக்கும் என்று வேதவாக்கியம் சொன்னதை அப்படியே நிறைவேற்றும் விதமாக, பரிசுத்த ஆவியானவர் கூட்டத்திற்குள் பிரவேசித்து, அவர் இவ்விடத்தில் இருந்தபோது செய்ததுபோலவே சபையார்மேல் அசைவாடி, இருதயங்களின் இரகசியங்களையும், பகுத்தறியும்போது, இருதயத்தின் எண்ணங்களையும், யோசனைகளையும், சிந்தையையும், எப்படி யாராவது சந்தேகிக்க முடியும்? பாருங்கள், ஒரு பரிபூரண அற்புதம் உண்டு, ஒரு முடமானவன் நடக்கிறதைக் காட்டிலும் ஒரு பெரிய அற்புதம், ஏனென்றால் அது ஆவிக்குரிய வல்லமையில்லாமல் சம்பவிக்க முடியாது. அதைச் செய்ய அது ஒரு

ஆவிக்குரிய வல்லமையாய் இருக்க வேண்டும். ஆகையால், வேதம் வாக்குத்தத்தம் செய்துள்ளதையும், நாம் என்ன விசுவாசிக்கிறோம் என்பதையும், அவர்கள் விசு-…நாம் விசுவாசிப்பதும் தான் அது என்பதை நீங்கள் அப்படியே காண்கிறீர்கள். சத்தமிடுவதைக் காட்டிலும் அது ஒரு அற்புதமாயிருக்கிறது. பாருங்கள், அந்நிய பாஷைகளில் பேசுவதைக் காட்டிலும் அது ஒரு அற்புதமாயிருக்கிறது. பவுல் அவ்வாறு கூறினான். அந்நிய பாஷைகளில் பேசும் அசலான பரிசுத்த ஆவியின் வரங்கள் கூட, அது அதைக் காட்டிலும் ஒரு அற்புதமாயுள்ளது. நாம் கடைசி அற்புதத்தில் இருக்கிறோம். அது வேதத்தினால் அந்த விதமாக முன்னுரைக்கப்பட்டுள்ளது.

16 ஆகையால் இன்றிரவு வரிசையினூடாக வந்து கரங்களை வைக்க நீங்கள் நாளை இரவுவரை காத்திருக்க வேண்டியதில்லை. இப்போது, உங்கள்மேல் கைகளை வைப்பது இருதயத்தின் எண்ணங்களைப் பகுத்தறிவதைத் தவிர வேறொன்றையும் செய்யாது; என்னைப் பொறுத்தவரை, அந்த அளவுக்குக்கூட செய்யாது. அப்பொழுது நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டு, அதைப் பற்றிக்கொள்ள முடியும், அது உங்களுடையதாயிருக்கிறது. நீங்கள் அதை உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்கள்.

17 ஆனால் நாளை இரவு, நீங்கள்…வேதமானது, “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின் தொடரும்” என்று கூறுகிறது. எல்லா அடையாளங்களும்; அதன்பின்னர், கடைசியாக, “அவர்கள் வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்களானால், அவர்கள் சுகமடைவார்கள்” என்று அவர் கூறினார். அது உண்மை. “அவர்கள்…” அந்த… அது விசுவாசிகளைப் பின்தொடரும். சரி. இப்பொழுது, நாம்—நாம் விசுவாசிகளாயிருக்கிறோம், எனவே, அந்தவிதமாக, நாம் ஒவ்வொரு இரவும் வியாதியஸ்தர் மேல் கைகளை வைத்து வருகிறோம், தேவன் அவர்களோடு மகத்தான அற்புதங்களைச் செய்திருக்கிறார். உறுமால்களை மேல் வைத்து ஜெபிப்பதன் மூலம் நமக்குப் பெரிய அற்புதங்கள் நடந்திருக்கின்றன. இருதயத்தின் நினைவுகளை வகையறுத்ததினால் நாம் மகத்தான அற்புதங்களை உடையவர்களாயிருக்கிறோம். பாருங்கள், அவை யாவும் ஒன்று சேர்ந்து தேவனுடைய மகிமைக்கென்று கிரியை செய்கின்றன. அது ஒரு மனிதனுக்கானதல்ல, அது சபைக்கானதல்ல, அது தேவனுடைய மகிமைக்கானதாயுள்ளது. தேவனுடைய மகிமை!

18 இப்பொழுது, நாம் இந்த இரவிற்கான வார்த்தையைத் திறப்பதற்கு முன்பு…ஓ, நாம் *இந்த விதமாகப்* பக்கங்களைத் திருப்பிப் பார்க்கலாம், ஆனால் தேவன் அதைத் திறக்க வேண்டும்; ஏனென்றால் வேதவாக்கியம் தனிப்பட்ட வியாக்கியானத்திற்குட்பட்டதல்ல, ஆனால் வேதவாக்கியத்தை எழுதின

பரிசுத்த ஆவியானவரே அதற்கு அர்த்தம் உரைப்பவர். எனவே நாம் ஜெபிக்கையில் இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்குவோமாக. எத்தனைபேர் ஜெபத்தில் நினைவு கூரப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள், அது என்னவாயிருந்தாலும், உங்களுடைய கரங்களை உயர்த்துவதன் மூலம், நீங்கள் அதைத் தெரியப்படுத்துவீர்களா? ஓ, தேவனே, பாருங்கள். நம் எல்லோருக்கும் தேவையாயிருக்கிறது, நமக்குத் தேவையா? நண்பர்களே, நானும் தேவையுள்ளவன். நான் என்னுடைய கரங்களை உயர்த்திருக்கிறேன்.

19 பரலோகப் பிதாவே, தாழ்மையாய், அமைதியாய், பயபக்தியாய் உம்முடைய மகத்தான கம்பீரமான பிரசன்னத்திற்குள்ளாக வந்து, அந்த ஒரு காரியம் சம்பவிப்பதற்கு முன்பு, நீர் இங்கிருக்கிறீர், ஏனென்றால் நீர் இருப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறீர். நீர் புறப்பட்டுச் செல்வதற்கு முன்பு, “எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் என் நாமத்தினாலே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருப்பேன். அவர்கள் எந்த ஒரு காரியத்தின் பேரிலும் ஒருமனப்பட்டால், கேட்டால், அவர்கள் பெற்றுக்கொள்வார்கள்.” கர்த்தாவே, உம்முடைய இரத்தத்தை கிரயத்திற்கு கொண்டு வருவதற்காக, ஒவ்வொரு மனிதனையும், ஸ்திரீயையும் அல்லது பிள்ளையையும், இன்று இரவு தங்கள் கைகளை உயர்த்திய ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும், அவர்களுடைய இருதயத்தை நீர் அறிவீர், அவர்கள் கேட்பதைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன். ஆண்டவரே, அதை அருளும்.

20 நாங்கள் தேவையுள்ள ஜனங்கள். நாங்கள் ஒரு இருண்ட உலகத்தில் உம்முடைய ஒரு பெரிய சத்துருவுடன், உம்முடைய பரிசுத்த ஆவியானவர் இல்லையென்றால், நாங்கள் அவனோடு சண்டையிடவே முடியாது. ஆதலால், அவர் நமக்கு முன்பாகச் சென்று வழியைத் தெளிவாக்குவார் என்று நாங்கள் நம்பி, விசுவாசித்து, நம்பிக்கையோடு செயல்படுகிறோம். வழிநெடுகிலும் எங்கள் களைத்த பாதங்களுக்காக எத்தனையோ இடர்ப்பாடுகள் உள்ளன, ஆனாலும் மரணம், நரகம், கல்லறை ஆகியவற்றை வென்றவரின் இரத்தம் தோய்ந்த காலடிகளைப் பின்தொடர முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

21 கர்த்தாவே, இன்றிரவு உம்முடைய பரிசுத்த ஆவியினால் சொல்லப்பட வேண்டிய வார்த்தைகளுக்கு எங்களை வழிநடத்தும், பின்னர் அந்த வார்த்தைகளை அவற்றுக்காக ஏங்கும் இதயத்திற்கு வழிநடத்தும். அப்படியானால், கர்த்தாவே, கூட்டத்தின் முடிவில், நாங்கள் எங்களுடைய வெவ்வேறு வீடுகளுக்குச் செல்லத் துவங்கி, எம்மாவூரிலிருந்து வந்தவர்களைப் போல நாங்களும், “வழியிலே அவர் நம்முடனே பேசினபோது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?” என்று கூறுவோமாக.

நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில், அவருடைய நிமித்தமாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

22 வேதவாக்கியங்களை குறித்துக் கொண்டிருக்கிற உங்களுக்கு, இப்பொழுது என்னோடுகூட முதலாம் இராஜாக்களின் புத்தகத்திற்குத் திருப்புங்கள். நான் 17-ம் வசனத்திலிருந்து…17-ம் அதிகாரத்திலிருந்து ஒரு பகுதியை வாசிக்க விரும்புகிறேன், சரியாகக் கூறினால், நான் 14-ம் வசனத்திலிருந்து துவங்கப் போகிறேன். முதலாம் இராஜாக்கள் 17-ம் அதிகாரத்தில் 14-ம், 15-ம், 16-ம் வசனங்களைப் படியுங்கள்:

> ***கர்த்தர்*** *தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய* ***கர்த்தர்*** *சொல்லுகிறார் என்றான்.*
>
> *அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள்.*
>
> ***கர்த்தர்*** *எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை.*

23 அவள் விழித்தெழுந்தபோது கிட்டத்தட்ட பகல் வெளிச்சம் இருந்திருக்க வேண்டும். அவள் அறைக்கு மறுபுறத்திலிருந்து வந்த ஒரு துக்கமான, சிறிய அழுகையைக் கேட்டபோது, அவள் தலையணையின் மேல் தன்னுடைய களைப்புற்ற தலையைத் திருப்பிக் கொண்டாள். அவளால் இரவு முழுவதும் உறங்க முடியவில்லை, அவள் இந்தப் பெரிய துயரத்தின் காரணமாக அலகழிக்கப்பட்டாள். அந்தச் சிறு பையன் இருபது அல்லது முப்பது நிமிடங்களுக்கு மேலாக உறங்காமல், மீண்டும் எழுந்திருந்தான், அவனுடைய சிறிய சத்தம், “அம்மா, நீங்கள் வெளியே போய்ச் சமையலறை அலமாரியில் மீண்டும் ஒருமுறை பார்த்து, ஒரே ஒரு சின்ன ரொட்டித் துண்டு இருக்கிறதா என்று பார்க்க மாட்டீர்களா? நான் மிகவும் பசியாயிருக்கிறேன்! என்னால் உறங்க முடியவில்லை” என்று கூறுகிறது.

24 அவள் அவனது சின்னஞ்சிறு முகத்தைப் பார்த்தபோது… அவனது சின்னஞ்சிறு கன்னங்கள் ஒடுங்கியிருந்தன, அவனது சின்னஞ்சிறு கண்கள் மஞ்சள் நிறமாக மாறியிருந்தன, வெட்டப்படாததால் அவனது நீண்ட முடி தொங்கிக்கொண்டிருந்தது, அவனது சின்னஞ்சிறு கந்தலான இரவுச் சட்டை; அவள் அவனது கன்னத்தைத் தட்டிவிட்டு, “அன்பே, தூங்க முயற்சி செய், புரிந்துகொள்” என்று சொல்ல, அவளது கண்களிலிருந்து வழிந்த

பெரிய கண்ணீர்த் துளிகள் அவனது சின்னஞ்சிறு முகத்தில் தெறித்தன.

25 மூன்று வருடங்களாகப் பூமியின் மேல் மழையே இல்லாதிருந்தது. அவள் தரையில் மண்டியிட்டு, தேவனை நோக்கிக் கதறியதை என்னால் காண முடிந்தது, அவள், "ஓ தேவனாகிய யெகோவாவே, நீர் எங்கள் பிதாக்களின் தேவன், நீர் உம்முடைய பிள்ளைகளுக்கு உணவளித்து, பல ஆண்டுகளாக அவர்களைப் பராமரித்து வருகிறீர்" என்று கூறினாள். நான் உமக்கு உண்மையாகவும், நேர்மையாகவும் வாழ முயற்சித்தேன், இப்பொழுது என்னுடைய குட்டிப் பையன் புசிக்க ஏதாவதொன்றிற்காக அழுவதையும், அவனுக்குக் கொடுக்க ஒன்றுமேயில்லாததையும் நான் இங்குக் காண்கிறேன். பல வாரங்களாக, நாங்கள் எங்களைப் பழக்கப்படுத்தி, மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு வேளை உணவை எடுத்துக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளோம். ஆனால் இப்போது, ஒரு சிறிய கைப்பிடி மாவும், ஒரு தேக்கரண்டி எண்ணெயும் தவிர மற்றெல்லாம் தீர்ந்துவிட்டது. இரவிலே நாங்கள் மரிக்க வேண்டியதாயிராதபடிக்கு, நான் அதைப் பகல் வரையிலும் நிறுத்தி வைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ஓ, தேவனே, நான் என்ன செய்திருக்கிறேன்? உம்முடைய பணிவிடைக்காரியாகிய, நான் உண்மையாய் ஜீவித்திருக்கிறேன். என்னுடைய கணவர் கர்த்தருக்கான யுத்தத்தில் மடிந்துவிட்டார், நான் இப்பொழுது பல வருடங்களாக விதவையாக இருந்து வருகிறேன், நான் சரியாக ஜீவித்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ள முயற்சித்திருக்கிறேன். நான் போக வேண்டிய நேரமாயிருந்தால், நான் அதைப் பற்றிக் கவலைப்படமாட்டேன்; ஆனால் என்னுடைய குட்டிப் பையனுக்கு, அவனுக்குக் கொடுக்க ஒன்றுமேயில்லாமல், புசிக்க ஏதாகிலும் அவன் கெஞ்சுவதைக் கேட்கவே என் இருதயமே நொறுங்குகிறது" என்றாள்.

26 அவள் ஜெபித்து முடித்த பிறகு, அவள் எழுந்தாள். அவன் மீண்டும் ஒரு சில நிமிடங்கள் உறங்கச் சென்றுவிட்டான். அவள் தன்னுடைய கரங்களை உயர்த்தியிருந்தாள், அவள் அணிந்திருந்த கிழிந்த இரவு ஆடையும் ஏறக்குறைய போய்விட்டிருந்தது. அவள் ஜன்னலருகே சென்று வெளியேப் பார்க்கிறாள், விடியத் தொடங்கும் நேரம் அது. ஓ, அது மிகவும் உஷ்ணமாயிருந்தது!

27 தேவனை மறந்திருந்த ஒரு தேசத்தின் மேல் நியாயத்தீர்ப்பின் அனல் காற்று வீசிக் கொண்டிருந்தது. அது இஸ்ரவேலின் மிகவும் கொடூரமான, பொல்லாத இராஜாவாகிய ஆகாபின் ஆளுகையின் காலமாயிருந்தது. அவன் விக்கிரகாராதனைக்காரியாயிருந்த ஒரு பாவியான யேசபேலை விவாகம் செய்திருந்தான். அதைப் போன்ற ஒரு கலப்பு விவாகம் ஒருபோதும் வெற்றியடைந்ததில்லை, அது அப்படியே இருக்க முடியாது, ஒன்று ஸ்திரீயானவள்

மனிதனுடைய வழியில் வருவாள் அல்லது புருஷன் ஸ்திரீயினுடைய வழியில் செல்வான். அவள் மிகவும் கவர்ச்சிகரமான ஒரு சிறு பெண்ணாயிருந்தாள், ஆகாப், வெதுவெதுப்பான ஒரு விசுவாசி, அவளுடைய கருத்துக்களுக்கு அடிபணிந்து, "ஓ, சரி, மார்க்கம் எனக்கு ஒன்றுமில்லை, நான் ஒரு இராஜா" என்று கூறினான். அவர்கள் தேவனுடைய பலிபீடங்களை இடித்துப் போட்டு, பாகால் அல்லது சரியாகக் கூறினால் பாகாலின் பலிபீடங்களை நிறுவினான். பெரும் அழுத்தத்தின் காரணமாக ஊழியக்காரர்கள் பணிந்துபோகும் வரை, உண்மையான மதத்திற்கு எதிரான கூக்குரல் மிகவும் வலுவாக ஒலித்துக்கொண்டிருந்தது.

28 சிறிது காலத்திற்கு முன்பு நான் ஊழியக்காரர்களைப் பற்றியோ அல்லது இந்தக் காலத்து வேறு ஏதோ ஒன்றைப் பற்றியோ ஒரு கருத்தைக் கூறினேன், அப்போது ஒரு குழுவினர் என்னைச் சந்தித்து, "சகோதரர் பிரன்ஹாம், எங்கள் சபையார் எங்களைச் சார்ந்து இழுக்கிறார்கள்!" என்றார்கள். அதுதான் அதற்குக் காரணமாயுள்ளது, போதகர் அவர்களைப் பிரியப்படுத்தவில்லையென்றால், சபை வெளியேறிவிடும்.

29 பாவம் அனுமதிக்கப்பட்டதாலும், அதற்கு எல்லையே இல்லாததாலும், ஊழியக்காரர்கள் நெடுங்காலமாக ராஜாவின் ஆதிக்கத்திற்கு ஆளாகி வந்தனர். அது இன்றைக்கு ஒரு மிகச் சிறந்த காட்சியாக இருக்கிறது, ஏனென்றால் தேசம் இந்தக் காரியங்களை அங்கீகரித்தது, ஜனங்கள் பிரபலமாக இருக்க விரும்பினர். அவர்கள், "தேசம் அவ்வாறு கூறின வரையிலும், அது சரிதான்" என்று எண்ணினர். அந்தவிதமாகத்தான் அவர்கள் இன்றைக்கு கூறுகிறார்கள், "மதுபானம் விற்பனை செய்வது சரி என்று தேசம் கூறும் வரை, அதைக் குடிப்பதும் சரியே. நமது பெண்களை அரைகுறையாக உடை உடுத்தி வீதியில் செல்லத் தேசம் அனுமதித்தால், மேலும் சட்டம் அவர்களைக் கைது செய்யாது, ஏன், அப்படிச் செய்வதில் தவறில்லை." அது தேசத்திற்கு சரியாக இருக்கலாம், ஆனால் தேவனுடைய மகத்தான புத்தகங்களில் நீங்கள் பொறுப்புள்ளவர்களாயிருந்து, தேவனுக்கு முன்பாகப் பதில் கூற வேண்டியவர்களாயிருப்பீர்கள். ஆனால் அவர்கள் விழுந்துபோய், பாரத்தின் கீழ் தாழ்ந்து கொடுக்க வேண்டியிருந்தது.

30 தேசம் செழித்துக்கொண்டிருந்தது, தேவன் அவர்களோடு இருந்தார் என்பதற்கு செழிப்பு ஒரு அடையாளம் என்று அவர்கள் எண்ணினர். அது முற்றிலும் உண்மையல்ல. தேவன் உங்களிடத்திற்கு வருகிறார்…

31 ஒரு பண்டைய பழமொழி, தேவனை கனவீனப்படுத்தும் பழமொழி, அது "தங்களுக்கு உதவி செய்கிறவர்களுக்கு தேவன் உதவி செய்கிறார்" என்று கூறுகிறது. அது தேவனுக்கு கனவீனமாயிருக்கிறதே! தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாதவர்களுக்குத் தேவன் உதவி செய்கிறார்.

அவர் இரக்கம் தேவைப்படுகிறவர்களின் தேவனாயிருக்கிறார். அவர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறார். "தங்களுக்கு உதவி செய்கிறவர்களுக்கு அவர் உதவி செய்கிறார்" என்று கூறுகிற அந்தப் பழமொழியும், உங்களால் உங்களுக்கு உதவி செய்ய முடிந்தால், அவருடைய உதவி உங்களுக்குத் தேவையில்லை. ஆனால் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாதவர்களுக்கு அவர் உதவி செய்கிறார்.

32 ஆனால், தாங்கள் நன்றாக உண்டு, நல்ல ஆடை அணிந்திருக்கும் வரை, எல்லாம் சரியாகிவிடும் என்று அந்தத் தேசம் நினைத்திருந்தது.

33 ஆனால் பழமைவாதியாக இருந்த ஒருவன் இருந்தான், அவன், பழமைவாதியான ஒரு தேவன் இருக்கிறார் என்றும், தமது வார்த்தையைக் காக்கும் ஒரு தேவன் இருக்கிறார் என்றும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் தேவன் பரிசுத்தமானவர் என்றும், அவருடைய பரிசுத்தத்திற்கு முழுமையாகச் சரணடைய வேண்டும் என்றும் விசுவாசித்தான். ஆனால் யேசபேலும் அவளுடைய நவீனத்துவக் குழுவினரும் அவனை வெறுத்தனர். அவன் அவர்களுடைய போதகராயிருந்தான், ஆனால் அவர்களோ அதை விசுவாசிக்கவில்லை. எனவே அவன் தன்னுடைய ஜீவியத்திற்காக ஒளிந்து கொள்ள வேண்டியதாயிருந்தது.

34 தேவன் அவனை மலையின் மேல் அனுப்பி, அவனுக்கு ஒரு செய்தியைச் சொல்லும்படி…கூறினார், "நீ போய் அந்தப் பொல்லாத வயோதிக ராஜாவை நோக்கி, '**கர்த்தர் உரைக்கிறதாவது**' என்று சொல். நீ மழையை அழைக்கும் வரை, அது பெய்யப்போவதில்லை, அல்லது பனி கூடப் பெய்யப்போவதில்லை" என்றார். மழை பெய்ய வேண்டிய வேளை வந்தபோது, அதை வரவழைக்கும்படி அதை எலியாவின் வாயில் கொடுத்தார்; ஆனால் அவன் பரலோகத்தின் திறவுகோல்களை உடையவனாயிருந்தான், அவனால் அதை மூடவோ அல்லது அதைத் திறக்கவோ முடியும். மேலும் அவர், "நீ இந்தக் குழப்பத்தினின்று வெளியே… இந்த…வனாந்திரத்திற்குள்ளாக, சரியாகக் கூறினால், வெளியே போக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் மத்தியிலிருந்து வெளியே போ. நீ அவர்களுக்குப் பிரசங்கம் செய்திருக்கிறாய், அவர்கள் உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள், அவர்கள் தொடர்ந்து மோசமாகிக்கொண்டிருக்கிறார்கள். வனாந்திரத்திற்குள்ளாகச் சென்று, அங்கே கேரீத், ஆற்றண்டையில் உட்கார்ந்து, நான்…உன்னைப் பராமரிக்கும்படிக்கு காகங்களுக்கு ஏற்கனவே கட்டளையிட்டிருந்தேன்" என்றார். ஓ, ஜனங்கள் அதைச் செய்யவில்லையென்றால், அதைச் செய்யத் தேவன் காகங்களை வைத்திருக்கிறார்!

35 யோவான், "தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்" என்றான்.

36 இயேசு, "அவர்கள் பேசாமலிருந்தால், கல்லுகள் உடனே கூப்பிடும்" என்றார்.

37 தேவன் விரும்புகிறதை அவர் செய்ய முடியும். அவர், "நான் காகங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன், அவைகள் உன்னைப் போஷிக்கப் போகின்றன" என்றார். அவைகள் அவனுக்கு மாமிசத்தையும் அப்பத்தையும் கொண்டு வந்தன.

38 யாரோ ஒருவர் ஒரு சமயம், "சகோதரன் பிரான்ஹாம், அவைகள் அதை எங்கிருந்து பெற்றன?" என்று கேட்டார்.

39 நான், "எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த ஒரே காரியம் என்னவெனில், அவைகள் அதைக் கொண்டு வந்தன. இயேசு ஐந்து மீன்களையும்...அல்லது ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, ஐயாயிரம் பேருக்குப் போஷித்த அதே இடத்திலிருந்துதான் அவை அவைகளைப் பெற்றன. சர்வ வல்லமையுள்ள தேவனின் சிருஷ்டிப்பின் கரத்திலிருந்து அவை வந்திருக்க வேண்டும்" என்று விடையளித்தேன். காகங்கள் அவனுக்கு மீனையும் அப்பத்தையும் கொண்டுவந்து, அமரந்து அதை எலியாவிடம் கொடுத்தன, அவனும் அதைச் சாப்பிட்டான், அந்த ஊற்றிலிருந்து குனிந்து குடித்தான். தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை இளைப்பாறச் செய்து கொண்டிருந்தார்.

40 ஓ, தேவன் தப்பித்துக் கொள்ள ஒரு வழியை உடையவராயிருக்கிறார் என்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்! அவன் ஒரு பைத்தியக்காரன் என்று அவர்கள் நினைத்தபோது, "அந்தப் பழைய தீர்க்கதரிசி, சந்தோஷத்தைக் கெடுப்பவன்," அவர்கள் கொண்டாடிக்கொண்டிருந்த சிறிய மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் இருந்து எப்போதும் மகிழ்ச்சியைக் கெடுக்க முயன்று, அது பாவம் என்று அவர்களிடம் கூறினான். தேவன்...தேவனுடைய கட்டளையை ஏற்று, மலைகளுக்கு ஏறி, தேசத்திலேயே மிகவும் வறண்ட இடமான உயரமான இடத்தில் அமர்ந்தான். ஆனாலும் தேவன் ஓடையை ஓடச்செய்தார். அவர்கள் அங்கே தண்ணீருக்காகத் தங்களுடைய நாவை கடித்துக்கொண்டிருந்தனர்.

41 ஜெபத்திற்கு பதிலளிக்க தேவன் ஒரு வழியை உடையவராயிருக்கிறார் என்பதை, நீங்கள் அறிவீர்கள். இந்தச் சிறிய ஸ்திரீ உண்மையாய் வாழ்ந்திருந்தாள். அவள் மறுமணம் செய்து கொள்ளாமல், தன் கணவனை மகிமையில் சந்திக்கும்படி தனிமையில் தரித்திருந்தாள். அவள் ஒரு கௌரவமான ஸ்திரீயாயிருந்தாள். மேலும் வாரக்கணக்கில் அந்தப் பானையில் உள்ள மாவு கீழே, கீழே இறங்கிக் கொண்டிருந்தது, அவள் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்க, எங்குமே பார்வையில் நம்பிக்கையே இல்லாதது போன்று காணப்பட்டது.

42 அதிலிருந்து நாம் ஒரு பாடத்தைப் பெற முடியும் என்பதை,

நீங்கள் அறிவீர்கள். அதாவது, நீங்கள் ஜெபித்து, நீங்கள் சந்திக்கும்படி தேவன் கோருகிற எல்லா தேவைகளையும் சந்தித்திருந்தாலும், அவர் இன்னமும் அமைதியாக இருக்கிறார், அவர் எந்தக் காரியத்தையும் கூறவில்லை, அதே சமயத்தில் நீங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தாலும், இப்பொழுது, அப்பொழுது என்ன சம்பவிக்கிறது? நீங்கள் அவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளீர்கள் என்பதையும், நீங்கள் செய்யத் தெரிந்த எல்லாவற்றையும் நீங்கள் செய்துள்ளீர்கள் என்பதையும் நீங்கள் அறிந்திருந்தால், அப்பொழுது விசுவாசம் தளராது, அது அப்படியே அமைதியாயிருந்து, நேர்மறையாகச் சிந்திக்கிறது. விசுவாசம் தன்னுடைய நித்திய பிடியைப் பற்றிக் கொண்டு காலங்களின் கன்மலையைச் சுற்றிலும் அசையாமல் நிற்கிறது.

43 "விசுவாசம்" என்று அழைக்கப்பட்ட அந்த மகத்தான நபர்! "விசுவாசம் மார்பில் முடியை உடையதாயிருக்கிறது" என்று நான் அடிக்கடி கூறியிருக்கிறேன். அவன் பேசும்போது, மற்ற யாவும் வாயடைத்துவிடுகின்றன. விசுவாசம், "வாயை மூடு!" என்று கூறும்போது, அப்பொழுது எல்லாமே நின்றுவிடுகிறது, ஏனென்றால் அவன் எஜமானாயிருக்கிறான்.

44 அவள் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்திருந்தாள். அவள் சுத்தமாக வாழ்ந்திருந்தாள், அவள் கண்ணியமாக வாழ்ந்திருந்தாள், அவள் கௌரவமாக வாழ்ந்திருந்தாள், அவள் தேவனுடைய தேவைகள் அனைத்தையும் சந்தித்திருந்தாள். ஆனால் அவர் அமைதியாக இருப்பது போன்று காணப்பட்டார். தேவன் உங்களுக்கு எந்தவிதமான ஒரு எதிர்விளைவு உண்டாயிருக்கும் என்று காணும்படியாக, சில சமயங்களில் உங்களைச் சோதிக்கும்படி செய்கிறார். அதை மறந்துவிடாதீர்கள்!

45 நீங்கள் மேடையைக் கடந்து சென்றால், உங்களுக்காக ஜெபிக்கப்பட்டு, உங்கள் மேல் கரங்கள் வைக்கப்பட்டு, ஒன்றுமே சம்பவிக்காதது போன்று தென்பட்டால், அது விசுவாசத்தை ஒரு துளியும் நிறுத்துகிறதில்லை, நீங்கள் தேவனுடைய தேவைகளைச் சந்தித்திருக்கிறீர்கள். இப்பொழுது, நீங்கள் அவைகளைச் சந்தித்திருந்தால் நலமாயிருக்குமே! இப்பொழுது, நீங்கள் தேவனிடத்தில் மறைத்துக் கொள்வீர்களானால், உங்களுடைய இருதயமே உங்களை ஆக்கினைக்குட்படுத்துகிறது…"நம்முடைய இருதயம் நம்மை ஆக்கினைக்குட்படுத்தவில்லையென்றால், அப்பொழுது நமக்குத் தண்டனை உண்டு" என்று நாம் அறிவோம். இப்பொழுது, ஆனால் நம்முடைய இருதயம் நம்மை ஆக்கினைக்குட்படுத்தினால், மேடைக்குக் வர வேண்டிய அவசியமில்லை, தேவனிடத்தில் எதையும் கேட்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் அதைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு விசுவாசம் இல்லை. ஆனால் தேவன் கேட்கிற ஒவ்வொரு தேவையையும் நீங்கள் சந்தித்திருக்கும்போது, அப்பொழுது

விசுவாசமானது முன்னோக்கி வந்து, “தேவன் தேவனாயிருக்கிறார்! நான் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளேன்” என்றது.

46 வேதம், “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் அடைந்து, அவர்கள் கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்” என்று கூறுகிறது. அந்தப் பாடல், “கர்த்தாவே, எனக்குப் போதியும்! ஓ, கர்த்தாவே, எப்படி காத்திருக்க வேண்டும் என்பதை எனக்குக் கற்பியும்” என்று கூறுகிறது. என்னுடைய ஆத்துமாவை கல்வாரியின் இரத்தத்தில் கழுவி, ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்து, சுற்றிலும் உள்ள எல்லா பாலங்களையும் எரித்து, “இப்பொழுது, கர்த்தாவே, நான் என் கரங்களில் ஒன்றையும் கொண்டு வரவில்லை, நான் வெறுமனே உம்முடைய சிலுவையை பற்றிக் கொள்கிறேன். கர்த்தாவே, நீர் அதை வாக்குப்பண்ணினீர்” என்று கூறுங்கள். அந்த விதமான நிலைமையே, நான் ஒரு தனிமைப்படுத்தப்பட்டவன் என்று ஜனங்கள் நினைக்கக் காரணம். ஆனால் அறையில், அல்லது பாலைவனத்தின் ஓரத்தில், நீங்கள் இங்கே இந்தப் பிரசங்க பீடத்திற்குள் நடந்து செல்வதற்கு முன்பு அந்த நிலைமைக்குத்தான் நீங்கள் வந்து விட வேண்டும். ஏனென்றால், சாத்தான் எதையாவது சீர்குலைக்க முயற்சிப்பதற்காக, எப்போதும் குட்டிப் பிசாசுகளை அனுப்பி வைப்பான். நீங்கள் உங்களுடைய சொந்த திறமையை, உங்களுடைய சொந்த சிந்தனைகளை நம்பாமல், சிலுவையை சரியாகப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும், அப்படியே நித்திய புயத்தின் மேல் சார்ந்திருங்கள். எந்தப் புத்திசாலித்தனத்தையும் உரிமை கோராமல், உங்களுடைய சொந்த சிந்தையைப் பற்றி உரிமை கோராமல், நீங்கள் உங்களைத் திறந்து பரிசுத்த ஆவியானவரைப் பேச அனுமதிக்கிறீர்கள். அந்த நிலைமைதான் தேவன் தம்முடைய சபைக்குள் இருக்க விரும்புகிறார். அந்த நிலைமைக்குள்ளாகுங்கள்.

47 தேவன் உங்களைச் சோதிக்கிறார். தேவனிடத்தில் வருகிற ஒவ்வொரு குமாரனும், அவன் சிட்சையை சகிக்க முடிகிறதா என்று காணும்படி, முதலாவது சோதிக்கப்பட்டு, சிட்சிக்கப்பட வேண்டும். நாம் முன்னே சென்று, “இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அவர் என் பாவங்களுக்காக மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்றும் நான் விசுவாசிக்கிறேன். என் மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, என் அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். என்னுடைய சமாதானமாகிய ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்” என்று கூறுவோமானால் நலமாயிருக்கும். உங்கள் பாவங்கள், அக்கிரமங்கள், திறமைகள் மற்றும் உங்களிடம் உள்ள அனைத்தையும்…அறிக்கையிட்டு, பலிபீடத்தில் சமர்ப்பிக்குமாறு நீங்கள் கூறும்போது, அங்கே, உங்கள் கையில் எதுவும் இல்லாத நிலையில், சாத்தான்

தன்னால் இயன்ற அம்பை உங்கள்மீது எய்வான். ஆனால் அதன்பின்னர் நீங்கள் அங்கிருந்து புறம்பே திரும்பி, “சரி, ஒரு வேளை நான் இரட்சிக்கப்படாமலிருக்கலாம், ஒரு வேளை நான் சுகமடையாமலிருக்கலாம்” என்று கூறினால், அதன்பின்னர் அதிலிருந்து விலகிச் சென்றால், நீங்கள் “முறைகேடான பிள்ளைகள், தேவனுடைய பிள்ளைகள் அல்ல” என்று வேதம் கூறியுள்ளது.

48 தேவன் ஆபிரகாமை சோதித்தவிதமாகவே ஆபிரகாமின் ஒவ்வொரு குமாரனையும் சோதிக்கிறார், ஏனென்றால் நாம் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் மரித்ததினாலே, நாம் ஆபிரகாமின் சந்ததியாய், வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரவாளிகளாயிருக்கிறோம். ஆபிரகாமின் சந்ததி, அதுதான் ஆபிரகாம் கொண்டிருந்த ஆவி. அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தான். நம்முடைய தகப்பனார் தேவனை நம்பி, ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்றுக் கொண்டாரானால், அது வெளிப்படுவதற்கு முன்னர் இருபத்தைந்து வருடங்களாக அதைப் பற்றிக் கொண்டிருந்தால், தகப்பனைப் போன்றே அவனுடைய வித்து எல்லா நேரத்திலும் பலமடைந்து கொண்டே வருகிறது. என்ன சம்பவித்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை, நாம் ஜெபிக்கப்படும்போது, அது தீர்த்து வைக்கப்படுகின்றதே! நாம் ஒவ்வொரு காரியத்தையும் வழியிலிருந்து அகற்றி, எல்லா தேவைகளையும் சந்தித்தபோது, ஒவ்வொரு காரியத்தையும் வழியிலிருந்து அகற்றும்போது, அப்பொழுது தேவனிடத்தில் கேட்டு, நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்பதை அறிந்து அங்கே நில்லுங்கள்.

49 தேவன் யோபுவை அந்தவிதமாகச் சோதித்தார். யோபு இரக்கத்தை வேண்டி, தன்னுடைய பிள்ளைகளுக்காக ஒரு பலி செலுத்தினபோது, அந்தத் தீர்க்கதரிசி கொண்டிருந்த ஒரே காரியம் ஒரு தகனபலி மாத்திரமே. ஆனால் தேவன் கேட்டதெல்லாம் அதுவே.

50 தேவனுக்கு கல்வியறிவும், ஏராளமான அர்த்தமற்ற காரியங்களும் தேவைப்படுகிறதில்லை, அவர் தம்முடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு இருதயத்தையே கேட்கிறார். அவர் உங்களை ஒரு குறிப்பிட்ட விதமாக உடை உடுத்திக்கொள்ளும்படியோ அல்லது—அல்லது குறிப்பிட்ட காரியங்களுக்குச் செல்லவோ அல்லது குறிப்பிட்ட கல்லூரிகளில் அல்லது பட்டங்களைப் படிக்கும்படி கேட்கிறதில்லை. அவர் ஒரு தாழ்மையுள்ள, நறுங்குண்ட, நொறுங்குண்ட ஆவியையும், அவரை ஏற்றுக்கொள்ள மனப்பூர்வமான இருதயத்தையும் கேட்கிறார்.

51 அவர் யோபுவை சோதித்தபோது, என்னவிதமான ஒரு எதிர்விளைவை அவர் அவனுக்குள் கண்டறிவார் என்று பார்க்கிறார். ஆனால் அவர் அவனுடைய ஆடுகளை எடுத்தபோது, அவனுடைய காளைகளை எடுத்தபோது, அவனுடைய ஒட்டகங்களை

எடுத்தபோது, அவனுடைய பிள்ளைகளை எடுத்துக் கொண்டபோது, "யோபு என்ன கூறுகினானோ அதை இப்பொழுது நான் பார்ப்பேன்" என்றார்.

52 மேலும் அவன், "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" என்றான்.

53 "அவனைப் போன்ற ஒருவன் பூமியிலே இல்லை" என்று அவர் சாத்தானிடம் கூறினதை அவர் யோபுவினிடத்தில் கண்டார்.

54 அப்பொழுது இடிமுழக்கங்கள் முழங்கத் தொடங்கின, மின்னல்கள் மின்னத் தொடங்கின. ஆவியானவர் தீர்க்கதரிசியின் மேல் வந்தபோது, அவன், "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாட்களில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். தோல் பூச்சிகள் இந்த சரீரத்தை அழித்தாலும், நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைக் காண்பேன்; அவரை நானே பார்ப்பேன், என் கண்களே அவரைக் காணும், வேறொருவர் அல்ல" என்று கூச்சலிட்டான்.

55 எபிரெய பிள்ளைகளுக்கு என்னவிதமான எதிர்விளைவு இருக்கும் என்று காணும்படி அவர் அவர்களைச் சோதித்தறிந்தார். அவர்கள் அஞ்ஞானிகளுக்கு மத்தியில், "ஜீவனுள்ள தேவன் ஒருவர் இருந்தார், யேகோவா தேவன் ஒருவர் இருந்தார், அவர் பரலோகத்தின் தேவனாகவும், பூமியின் தேவனாகவும் இருந்தார் என்றும், அவர் ஒவ்வொரு ஆத்துமாவையும் தம்முடைய கரத்தில் வைத்திருந்தார்" என்றும் அறிக்கை செய்திருந்தனர். எனவே தேவன் அவர்களைச் சோதிக்கும்படி செய்தார். அவர்கள் எல்லா தேவைகளையும் சந்தித்திருந்தனர், அவர்கள் ஜெபித்து, எல்லாவற்றையும் வழியிலிருந்து அகற்றிவிட்டனர். அவர்கள் ராஜாவின் சொரூபத்தை பணிந்து கொள்ளவில்லை. அவன் சூளையை எப்போதும் இருந்ததைக் காட்டிலும் ஏழு மடங்கு அதிக சூடாக்கினான். சாத்தான் அவர்களிடம், "இதுவே பாதையின் முடிவு" என்று கூற முயற்சித்துக் கொண்டிருந்தான் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் பேசின விதத்தை நான் விரும்புகிறேன், "எங்களுடைய தேவன் அந்த அக்கினிச் சூளையிலிருந்து எங்களை விடுவிக்க வல்லவராயிருக்கிறார், ஆனாலும், அவர் அவ்வாறு செய்யவில்லையென்றால், நாங்கள் தேவனுடைய கற்பனைகளை மீறமாட்டோம். நாங்கள் உண்மையாய் நிலைத்திருப்போம்! நாங்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு உண்மையாய் தரித்திருந்தோம் என்ற எங்களுடைய விசுவாசம் வரப்போகும் காலங்களினூடாக ஒலிக்கட்டும்" என்றனர்.

56 "என் தேவன் *இதிலிருந்து* என்னைச் சுகப்படுத்த வல்லவராயிருக்கிறார்." அல்லது, "என் தேவன் என்னை இந்தச் சக்கர நாற்காலியிலிருந்து எடுக்க வல்லவராயிருக்கிறார். என் தேவன் *இதைச்* செய்ய வல்லவராயிருக்கிறார். ஆனால் நான் அவரை

என்னுடைய சுகமளிப்பவராக ஏற்றுக்கொண்டிருக்கிறேன். நான் என்னுடைய பாவங்களையும், என்னுடைய அவிசுவாசத்தையும் அறிக்கை செய்திருக்கிறேன், அவர் என்னுடைய சுகமளிப்பவர் என்று நான் விசுவாசிக்கிறேன் என்று அறிக்கை செய்திருக்கிறேன். என்ன வந்தாலும் வரட்டும், போகட்டும். இன்றைக்கு எனக்குச் சுகமில்லையென்றால், நாளை நான் சுகமாய் இருப்பேன்; நான் நாளை இல்லாவிட்டால், அடுத்த ஆண்டு நான் இருப்பேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமம் ஸ்தோத்தரிக்கப்படுவதாக!"

57 ஓ, அது அங்கேதான் இருந்தது! அவர்கள் அக்கினிச் சூளைக்குள் நடந்து சென்றபோது, சோதனையின் கீழும், ஒரு சோதனையின் கீழும், அவர்கள் முடிவு பரியந்தம் உண்மையாய் நிலைத்திருந்தனர். ஆனால் தேவன் ஒரு நொடிப்பொழுதில் அங்கிருந்தார், அவர் அவர்களை விடுவித்தார். அவர்கள் ஜெபிக்கப்பட்டு, அவர்களுடைய பாவங்கள் அறிக்கை செய்யப்பட்டன என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் தேவைகள் ஒவ்வொன்றையும் சந்தித்திருந்தனர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், ஆயினும் அவர் அமைதியாக இருப்பது போன்று காணப்பட்டார். நீங்கள் உண்மையாகவே என்னவாயிருக்கிறீர்கள் என்பதையும், உங்களுடைய உட்புறத்தில் என்ன உள்ளது என்பதையும், நீங்கள் உங்களுடைய உதடுகளினால் என்ன கூறுகிறீர்கள் என்பதை உங்களுடைய இருதயத்திலிருந்து நீங்கள் உண்மையாகப் பொருட்படுத்திக் கூறுகிறீர்களா என்று பார்த்து அவர் உங்களைச் சோதிப்பதற்காக மட்டுமே மௌனமாக இருக்கிறார். அது ஆழமாகச் செல்லட்டும். நாம் நம்முடைய உதடுகளினால் கூற முடியும், ஆனால் நம்முடைய இருதயம் அதைக் கூறுகிறதா?

58 இப்பொழுது, இந்தச் சிறிய ஸ்திரீ இந்தத் தேவைகள் எல்லாவற்றையும் அவள் சந்தித்திருந்தாள் என்பதை அறிந்திருந்தும், அப்பொழுதும் தேவன் அமைதியாக இருந்தார். அவர் அவளுக்காகக் அக்கறை கொள்ளவில்லை என்பது போன்று தென்பட்டது, அவள் ஜீவித்தாலும் அல்லது மரித்தாலும் அவர் அக்கறைகொள்ளவில்லை. ஆனால், எல்லா நேரத்திலும், தேவன் கிரியை செய்து கொண்டிருந்தார். அவள் அதைக் குறித்து அறிந்திருக்கவில்லை, ஆனால் தேவன் எலியாவினிடத்தில் கூறினார். அவர் ஆற்றை வற்றச் செய்து, தம்முடைய கரத்தை நீட்டி, ஓடை ஓடவிடாமல் நிறுத்தினார். எலியாவோ, "கர்த்தாவே, அது ஏன் நின்றது?" என்று கேட்டான்.

59 அவர், "உன்னைப் போஷிக்கும்படி நான் ஒரு விதவை பெண்ணுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்" என்றார். அவர் ஏற்கனவே அவளுக்குக் கட்டளையிட்டிருந்தார், அவள் அதை அறியவில்லை.

60 உங்களுடைய சுகமளித்தலைக் குறித்து ஒரு சாட்சியை அவர் உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கலாம்; நீங்கள் அதை

அறியாமலிருக்கலாம், ஆனால் அப்படியே காத்திருங்கள். நீங்கள் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துவிட்டீர்கள் என்று உறுதியாக நம்பும்போது, உங்களுக்குத் தெரிந்த அனைத்தையும் செய்து முடித்துவிட்டீர்கள் என்று அறிந்து, உங்களைத் தேவனுக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கும்போது, அப்போது செய்ய வேண்டிய ஒரே காரியம், அவருடைய வாக்குறுதியைப் பற்றிக்கொள்வதுதான். அப்படியே நிலைத்திருங்கள்! பதிலளிப்பதாகத் தேவன் வாக்குத்தத்தை அளித்தார், அவர் அதைச் செய்வார். அவர் என்ன கட்டளையிட்டிருக்கிறார் என்றும், என்ன தூதன், அல்லது *என்ன* செய்ய வேண்டும் என்றும் நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். நாளை இரவு சுகமளிக்கும் ஆராதனை துவங்குவதற்கு முன்பு, அது இந்த இரவாக இருக்கலாம். ஒரு வேளை தேவன் உங்களுடைய இன்றைய நிலையைக் கண்டிருக்கலாம், அவர் உங்களுடைய ஜெபத்தைக் கேட்டிருக்கலாம்.

61 நான் இந்தச் செவிடர் மற்றும் வாய் பேச முடியாத ஜனங்களுக்காக மிகவும் வருந்தினேன். நான் அவர்கள்மீது கரங்களை வைத்து, அவர்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன், நேற்றிரவு நிறுத்தத் துவங்கினேன், ஆனால் அது மற்றவர்களுக்குச் சரியானதாயிருக்காது என்று நான் கூறினேன். ஆனால் இருதயத்தை அறிந்த ஒரு அமைதியான தேவன் எங்கோ ஓரிடத்தில் இல்லை என்பதை நான் எப்படி அறிவேன், இந்த ஜனங்கள் தேவனுக்குரிய தங்களுடைய தேவைகளைச் சந்தித்துள்ளனர், அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள், அவர்களுடைய எல்லா துன்பத்திலிருந்தும் அவர்களை விடுவிக்க இன்றிரவு இங்கே ஒரு தூதன் இருக்கிறாரா? எனக்கு எப்படித் தெரியும்? இன்றிரவே தேவன் அவர்களுடைய விடுதலையைக் கட்டளையிட்டிருக்கலாம். நான் வியாதியஸ்தருக்காக ஜெபித்தாலும் அல்லது ஜெபிக்காவிட்டாலும், அவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள், ஏனென்றால் தேவன் அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். தேவனைக் குறித்து நிச்சயமுடையவர்களாயிருங்கள், அதன்பின்னர் நிலைத்திருந்து, அவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள். தேவன் சரியான காரியங்களை எப்படி செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார், அதை எப்படி சரியான முறையில் செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்.

62 இப்பொழுது, தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை ஒரு விதவை ஸ்திரீயின் வீட்டிற்கு அனுப்புவார் என்பது மிகவும் விநோதமான ஒரு காரியமாய் உள்ளது. என்னே ஒரு இடம்! ஆனால் அவள் ஒரு உண்மையான நல்லொழுக்கமுள்ள ஸ்திரீயாக இருந்திருக்க வேண்டும், இல்லையென்றால் அவர் ஒருபோதும் தம்முடைய தீர்க்கதரிசியை அங்கு அனுப்பியிருக்கவேமாட்டார். ஓ, ஒரு நபர் தகுதியுள்ளவராயிருந்தால், எலியாவைப் போன்ற ஒரு மனிதனை உபசரிக்க ஒரு தகுதியுள்ள நபராக இருந்திருக்க வேண்டும்.

63 உங்களுக்கு நினைவிருக்கிறதா, சகரியா தன் வீட்டில், தேவன் தங்களுக்கு ஒரு பிள்ளையைத் தருவார் என்றும், காபிரியேல் என்னும் தேவதூதன் அந்த வீட்டிற்கு வருவான் என்றும் உண்மையோடும் விசுவாசத்தோடும் காத்திருந்தான். சுத்தமாகவும், தூய்மையாகவும் வாழ்ந்து, தேவனுடைய வாக்குத்தத்தத்திற்காகக் காத்திருந்த கன்னி மரியாளுக்காகவே, அவர் ஒரு தூதனை அனுப்பினார்.

64 உலகத்தோடு சுற்றித் திரிவதைக் குறித்தும், உலகத்தோடு சரசமாடுவதைவதைக் குறித்தும் பேசி, அதன்பின்னர் தூதர்களைக் காணவும், அற்புதங்களைச் செய்ய வேண்டுமென்றும் எதிர்பார்ப்பது தேவனுடைய திட்டத்திற்கு புறம்பானது. நீங்கள் சரியாக வாழ வேண்டும். வீட்டைச் சுத்தம் செய்யுங்கள், உங்களுடைய பழக்க வழக்கங்களைச் சுத்தம் செய்யுங்கள், உலகத்தின் காரியங்களைச் சுத்தம் செய்யுங்கள், உங்களுடைய அட்டைகளையும், உங்களுடைய உலகப்பிரகாரமான தொடர்புகளையும் நீக்கிவிட்டு, ஆயத்தமாகுங்கள், அப்பொழுது தேவனுடைய தூதன், “பயப்படாதே, அது நானே” என்று கூறி பேச முடியும். அப்பொழுது காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால் அவன்…

65 மலையிலிருந்து தீர்க்கதரிசி இறங்கி வருவார் என்பதை அறியாமல், அந்தச் சிறிய ஸ்திரீ ஜெபித்துக் கொண்டிருந்தாள். அவன் எங்குச் செல்ல வேண்டும் என்ற ஒரு தரிசனத்தை உடையவனாயிருந்தான். தேவன் தம்முடைய ஜனங்களைக் குருட்டுத்தனமாக வழி நடத்துகிறதில்லை, அவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் அவர்களிடம் கூறுகிறார். அவன் நகரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். ஓ, அது பயங்கரமாயிருந்தது. ஜனங்கள் மரணத்திற்கு பட்டினியால் வாடினர், தண்ணீருக்காகக் கதறிக்கொண்டிருந்தனர், ஜனங்கள் பசியாயிருந்தனர். அது ஒழுக்கக்கேட்டின் பிரதிபலிப்பாய் உள்ளது. அது பாவத்தின் பிரதிபலிப்பாகும்.

66 இந்தத் தேசம் அதற்கான தண்டைக்காக உள்ளது. உங்களால் முடியாது…நாம்—நாம் கட்டுப்பாடற்ற வாழ்க்கைமுறையில் பணத்தை வீணடிக்கும்போதும், உலகின் பாதி மக்கள் பட்டினியால் சாகும்போதும், சமநிலைகளும், இயற்கை விதியும்கூட அதை அனுமதிக்காது; அவர்கள் அனைவரும் கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அந்த மனிதர்கள்தான்.

67 அந்தக் காரணத்தினால்தான் ஊழியக் களங்கள் என் இருதயத்தில் உள்ளது. உங்களுக்கு இங்கே ஃபீனிக்ஸிலும், அமெரிக்கா முழுவதிலும் மற்றும் எல்லா இடங்களிலும் உள்ள அற்புதமான ஊழியக்காரர்கள் உள்ளனர், ஒவ்வொரு மூலையிலும் உள்ள சபைகள், மகத்தான தேவனுடைய மனிதர்கள், சுகமளிக்கும் ஆராதனைகள், ஓரல் ராபர்ட்ஸ் போன்ற மகத்தான மனிதர்கள் மற்றும் மற்ற மகத்தான மனிதர்கள், பிரசங்கம் செய்தனர். அங்கே

அப்பாலுள்ள ஜனங்கள், இயேசுவின் நாமத்தைக் குறித்து ஒருபோதும் கேள்விப்படாதபடியால், ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானோர் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய, அசுத்தமான, பசியுள்ள கருப்பினத்தவர்கள், அப்பால் ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும், தெருவில் கிடக்கும் சிறு நபர்கள் மரித்துக் கொண்டிருக்கின்றனர். “தேவன்” என்றால் என்ன என்று கூட அறியாதிருக்கிறார்கள். அதன்பின்னர் நாம் நம்முடைய சிறு மத நம்பிக்கை வேறுபாடுகளைக் குறித்து வாதிடுகிறோம். ஓ, அது முற்றிலும் சரியல்ல, நண்பர்களே, அதைக் காண்பது உங்கள் இருதயத்தில் இருக்குமா என்று நான் நினைக்கவில்லை.

68 இப்போது, இந்தப் பாவப்பட்ட இளம் பெண்ணைக் கவனியுங்கள், அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்து, விடியப் போவதை அறிந்தபோது, தனக்காக என்ன காத்திருக்கிறது என்பதை அவள் சிறிதும் அறிந்திருக்கவில்லை. தனக்கும் தன் சிறுவனுக்கும் மரணம்தான் என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். எனவே நான்…அவள் உறங்கிக் கொண்டிருக்கையில், நாம் அவளை ஒரு சில நிமிடங்கள் பார்ப்போமாக. அவள் ஜெபித்தப் பிறகு, அவள் சென்று, அவனுடைய சிறிய தலைமுடியை அவனுடைய கண்களிலிருந்து வருடி, “அன்புள்ள குட்டி நபரே, நீ உன்னுடைய விலையேறப்பெற்ற, பரிசுத்தமான தந்தையைப் போன்றே காணப்படுகிறாய். அவர் எப்படியாய் தேவனை நம்பினார்! எப்படியாய் அவர் இஸ்ரவேலரின் காரியத்திற்காக, யுத்தகளத்தில் தன்னுடைய ஜீவனையே கொடுத்தார்! நீ அவரைப் போன்றே காணப்படுகிறாய். மேலும், தேனே, குற்றமற்றவர்கள் ஏன் குற்றவாளிகளோடு பாடுபடுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அவர்கள் அதை அனுபவிக்கிறார்கள்” என்றாள்.

69 இந்தத் தேசம், கிறிஸ்தவர்கள், அரசியலில் உள்ள அநீதியின் காரணமாக அவதியுறுவார்கள், முழு தேசத்தையும் துன்பப்படுத்துகிறது.

70 இப்பொழுது அவள் உள்ளே சென்று, “நான் இப்பொழுது ஒரு சிறிய அடையைச் செய்வேன். என்னிடம் ஒரு சிறு அடை மாத்திரமே மிச்சமிருக்கிறது, அதை நாங்கள் புசித்தபின், நாங்கள் மரித்துப்போவோம்” என்று கூறுவதை என்னால் காண முடிகிறது. எனவே அவள் அறைக்குள்ளாகச் சென்று, மாவுப் பானையிலிருந்து மாவை வெளியே எடுக்கிறாள். அது இருந்த சிறிய பானையின் குறுக்கே அவள் தட்டும்போது, அந்தச் சிறிய, எலும்புக்கூடு போன்ற கையால் அதைத் தூசியைத் தட்டுவதை என்னால் பார்க்க முடிகிறது; ஒவ்வொரு துணுக்கு தூசியையும் அடித்து, கடைசியாக ஒரு அடைக்குப் போதுமானதைப் பெற்றுக்கொண்டாள்; அந்தச் சிறிய கலயத்தின் அருகே சென்று, அதை உயர்த்திப் பிடித்து, அதிலுள்ள எண்ணெய் முழுவதையும், அதாவது சுமார் ஒரு தேக்கரண்டி அளவு எண்ணெயை, வடித்து எடுக்கிறாள்.

71 இப்பொழுது, ஆகாரம், அந்தக் காரியங்கள் யாவும் ஒரு பொருளை உடையதாயிருக்கின்றன. ஆகாரம் "கிறிஸ்துவை" குறிக்கிறது. கிறிஸ்து போஜனபலியாக இருந்தார். பழைய ஏற்பாட்டில், அசைவாட்டும் காணிக்கையில் கிறிஸ்துவாக இருந்தவருக்காக, அசைவாட்டும் காணிக்கைக்கான மாவை அவர்கள் அரைத்தபோது, ஒவ்வொரு சிறு துணுக்கும் ஒரே மாதிரியாக வெட்டப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு குறிப்பிட்ட வகை அரைப்பானைக் கொண்டு அதை அரைத்தார்கள், ஏனென்றால் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

72 அங்குள்ள சில பள்ளிகள் பேய்க் கொமட்டி காய்களுக்கும் பட்டாணிக்கும் இடையேயான வித்தியாசத்தை அறியாதபோது, சில பேய்க் கொமட்டி காய்களை ஒரு பானை பட்டாணியில் சமைப்பதற்காகப் போட்டபோது, அவர்கள், "பானையில் மரணம் இருக்கிறது" என்று சத்தமிட்டனர்.

73 எலியா ஒரு கைப்பிடி அளவு மாவைப் பெற்று, அதைப் பானையில் போட்டு, "சாப்பிடுங்கள்!" என்றான். ஆகாரம் என்ன செய்தது? பானையில், மாவு அதை மரணத்திலிருந்து ஜீவனுக்கு மாற்றினது; ஒரு மரணத்தைக் கொடுக்கும் மூலப்பொருளிலிருந்து ஒரு ஜீவனை அளிக்கும் ஆதாரமாக மாற்றியது.

74 உங்களுடைய பாத்திரத்தில் மரணம் இருக்கும்போது, இன்றிரவும் அதேக் காரியம் தான் உள்ளது. கிறிஸ்து, உங்களுடைய பாத்திரத்தில் போடப்பட்டு, உங்களை மரணத்திலிருந்து ஜீவனுக்குள்ளாகக் கொண்டு வருகிறார். கிறிஸ்து வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறார். மானிட இருதயத்திற்குள்ளாக வரும்போது, ஓ, அவர் அறிவுக்கூர்மையைக் கடந்த சமாதானத்தை அருளுகிறார். மேலும் அது நித்திய ஜீவனை அளிக்கிறது, "குமாரன் மேல் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, அவன் ஒருபோதும் அழிந்து போவதில்லை."

75 இப்பொழுது, அவள் ஆகாரத்தைப் பெற்றாள், அது கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருந்தது. கிறிஸ்து வார்த்தையாயிருக்கிறார். "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்." கிறிஸ்து, போஜன பலி! அதன்பின்னர் அவள் சென்று எண்ணெய் கொண்டு வந்தாள். *எண்ணெய்* "ஆவியைக்" குறிக்கிறது. எனவே அவள் வார்த்தையையும் ஆவியையும் ஒன்றாக இணைத்து, அதைக் கலக்கத் துவங்கினாள்.

76 ஓ, அது நிகழும்போது ஏதோ ஒன்று சம்பவிக்க வேண்டுமே! இன்றிரவே நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கிற வார்த்தை உங்கள் இருதயத்தில் விழுவதாக. அதன்பின்னர் பரிசுத்த ஆவியானவர் அங்கே உள்ளே பிரவேசித்து, அதைக் கலக்கச்

செல்லட்டும். நீங்கள் வார்த்தையையும் ஆவியையும் ஒன்றாக இணைக்கும்போது என்ன சம்பவிக்கிறது என்பதைக் கவனியுங்கள்! இயேசு கிணற்றண்டையிலிருந்த ஸ்திரீயினிடத்தில், "ஸ்திரீயே, நான் உனக்குச் சொல்லுகிறேன், தேவனை ஆவியோடும் சத்தியத்தோடும் தொழுதுகொள்ளும்படி கேட்கிற காலம் வந்து கொண்டிருக்கிறது" என்று கூறினார். அவரே சத்தியமாயிருக்கிறார்.

77 ஆகாரம், அவள் என்ன செய்தாள் என்று பாருங்கள், அவள் வார்த்தையும் ஆவியும் ஒன்றாகக் கலந்தாள். அநேக ஜனங்கள் வார்த்தை இல்லாமல் ஆவியை உடையவர்களாயிருக்கிறார்கள், சிலர் ஆவியில்லாமல் வார்த்தையை உடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் எடுத்துக்கொண்டால், அவைகள் இரண்டையும் அந்தந்த இடத்தில் சரியாக வைத்தால், அங்கே சாலையில் ஒரு அடை உள்ளது! அங்கே ஏதோ ஒன்று உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

78 பரிதாபமான விதவையோ அவள் என்ன செய்து கொண்டிருந்தாள் என்பதை அறியாதிருந்தாள், ஆனால் தேவன் எலியாவிடம், "நான் அவளுக்குக் கட்டளையிட்டேன்" என்றார்.

79 எலியா தன்னுடைய தரிசனத்தில் எங்கோ நிறைவேற்றப்படுவதைக் காணும்படியாக உருளைக் கற்களின் மேல் தன்னுடைய பாதையில் வந்துகொண்டிருக்கிறான். இங்கே அவள் அங்கே நின்று கொண்டு, தன்னுடைய பழைய கிழிந்த சட்டையால் கண்ணீரை துடைத்து, "ஓ, யேகோவா தேவனே, என்னுடைய விசுவாசம் ஒருபோதும் தோற்றதில்லை, அது தோல்வியடையாது. எப்படியோ அல்லது வேறுவிதமாக, இவையனைத்தும் எப்படி என்று எனக்குத் தெரியாது, ஆனால் எல்லாக் காரியங்களும் ஒருமித்து நன்மைக்கேதுவாகக் கிரியை செய்ய வேண்டும் என்று நாங்கள் போதிக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறிக் கொண்டிருந்தாள். அவள் இந்தச் சிறிய மாவை கலக்கிக் கொண்டிருந்தாள், அவள் சிறிய அடையை நன்றாகத் தயார் செய்து, தட்டினாள். அவள், "இப்பொழுது நான் வெளியே சென்று கொஞ்சம் விறகு கொண்டு வர வேண்டிய நேரமாகிவிட்டது" என்றாள். அவள் திரும்பிச் சென்று கதவைத் திறந்து, "ஓ கர்த்தாவே, அந்தப் பரிதாபமான பசியுள்ள வயிறு அங்கே கிடக்கிறது, நான் இரண்டு அல்லது மூன்று வாரங்களாகச் சாப்பிடவில்லை. நான் என்னுடைய அடையை அவனுக்குக் கொடுத்திருக்கிறேன்" என்றாள்.

80 அது ஒரு தாய், தன்னுடைய குழந்தைக்கான ஒரு தாயின் அன்பு, அதற்கு நிகரில்லை, தேவனுடைய அன்பு மட்டுமே: "ஒரு தாய் தன்னுடைய பாலகனை மறக்கலாம், ஆனால் என்னால் உன்னை ஒருபோதும் மறக்கவே முடியாது. உங்களுடைய பெயர்கள் என்னுடைய உள்ளங்கைகளில் வரையப்பட்டிருக்கின்றன." அவர் எப்படி உங்களை மறக்க முடியும்? "நான் உன்னைக் கைவிடுவதுமில்லை, உன்னை விட்டு விலகுவதுமில்லை.

உலகத்தின் முடிவுபரியந்தம் நான் எப்பொழுதும் உங்களுடனே கூட இருப்பேன்” என்றார்.

81 அங்கே அவள் தன்னுடைய குழந்தையைப் பார்க்கிறாள், ஒருக்கால் அவள் பின்னால் நழுவிச் சென்று அவனுடைய சிறிய நெற்றியில் முத்தமிட்டிருக்கலாம். அவள் வெளிப்புறத்தில் மயக்கமடைந்து மரித்தால், அவள் வெளியே செல்கிறாள். இப்பொழுதுதான் ஒருவிதமாக...யூதேய மலைகளுக்கு மேல் சூரியன் மெல்ல உதிக்கத் தொடங்கியிருந்தது. அவள், சூரியன் எழத் தொடங்குவதைப் பார்க்கிறாள். தெருவின் வெகுதூரத்தில் அவள் சபிப்பதையும், தொடர்ந்து சத்தமிடு வதையும் கேட்கிறாள். அவள் முற்றத்திற்குச் சென்று, கவனியுங்கள், அவள் இரண்டு விறகு சுள்ளிகளை எடுத்தாள், கைச்சுமை அல்ல, *இரண்டு* விறகு சுள்ளிகள். அது என்ன? சிலுவை.

82 இப்போது, எவருக்குமே தெரியும், இங்குள்ள என் இந்திய நண்பர்கள் யாருக்காவது தெரியும், அல்லது எந்த வேட்டைக்காரருக்கும் தெரியும், நெருப்பை நீண்ட நேரம் எரிய வைப்பதற்கான சரியான வழி இதுதான், இரண்டு விறகுகளை, அதாவது இரண்டு மரக்கட்டைகளை, குறுக்காக வைத்து, நடுவில் சரியாகப் பற்றவைத்து, அதன் முனைகளை உள்ளே தள்ளிக்கொண்டே இருக்க வேண்டும். அது இரவு முழுவதும் நீடிக்கும். நான் அநேக முறை வனாந்திரத்தில் *அதைவிட* பெரிதாயில்லாத இரண்டு விறகுகளை வைத்து இரவு முழுவதும் கதகதப்பாக இருந்திருக்கிறேன். வெப்பத்தைத் தக்கவைத்துக் கொள்ள அது போதுமானது, அதன் மையத்தில் அது தொடர்ந்து சென்று கொண்டேயிருக்கும்.

83 இப்பொழுது அவள் என்ன செய்யப் போகிறாள்? இந்த இரண்டு விறகுகளையும் கொளுத்துகிறாள். வார்த்தையும் ஆவியும் சிலுவையிலுள்ள சுய-தியாகத்தை, கடமைக்காக ஆயத்தமாக, ஜீவனுக்காக ஆயத்தமாகக் கொண்டு வந்துள்ளது. வார்த்தையையும் ஆவியையும் பொருத்துதல், அது பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய வார்த்தையில் அவளுடைய விசுவாசமாயுள்ளது, சிலுவைக்கு வேறெந்த காரியத்தையும் தியாகம் செய்யத் தன்னை வழிநடத்துகிறாள். அவள் தன்னுடைய கரத்தின் கீழே அந்த இரண்டு விறகுகளை வைத்துக் கொண்டு, அவள் திரும்பிப் போக, வாசலில் இருந்து, “பெண்மணியே” என்ற ஒரு சத்தம் உண்டானது.

84 அதற்குச் சற்று முன்னர், ஒரு வயோதிக, ஒருகால் வழுக்கைத் தலையோடு, நரைத்த மீசை தொங்கிக் கொண்டிருக்க, தன்னுடைய தலைமுடி கீழே தொங்கிக்கொண்டிருந்தது, தன்னுடைய கையில் ஒரு சிறிய தடியை, ஒரு பழைய ஆட்டுத்தோலை அல்லது வேறெதோ அவனைச் சுற்றிக் கொண்டு, தெருவில் நடந்து சென்று, “கர்த்தாவே, அது ஒரு குறிப்பிட்ட சிறிய வெள்ளை வேலி. ஒரு அழகான வாலிப ஸ்திரீ இருப்பாள்” என்று கூறியிருப்பான், (அவள் வாலிபமாக

இருந்திருக்க வேண்டும், அந்தப் பையன் வாலிபமாக இருந்தான்) "முற்றத்தில் இருந்தான். என்னைப் போஷிக்க வேண்டிய அந்த விதவை அவள் என்று நீர் என்னிடம் கூறினீர். இப்பொழுது, அவள் எங்கே இருக்கிறாள்? நான் தொடர்ந்து நடந்து செல்வேன்" என்றான். ஆவியானவர் அவனை *இந்த* ஒரு வழியாய் நடத்தி, அதன்பின்னர் அவனைத் திருப்புகிறார். ஓ, தேவனுடைய குமாரர்கள் தேவனுடைய ஆவியினால் வழி நடத்தப்படுகிறபடியால் அது மிகவும் அற்புதமாயுள்ளது. அது எவ்வளவு முட்டாள்தனமாகத் தென்பட்டாலும், அவர்கள் வழி நடத்தப்படுகின்றனர்! அவள் போகிறாள்…அவன் ஒரு தெருவில் இறங்கி இன்னொரு தெருவில் ஏறுகிறான், ஒரு தெருவில் இறங்கி இன்னொரு தெருவில் ஏறுகிறான்.

சிறிது நேரம் கழித்து, ஆவியானவர், "உன் வலது பக்கமாகப் பார்" என்றார்.

85 அவர் இங்கிருக்கும் மேடையில, இரவுதோறும் செய்வது போலவே, *அதை* அப்படியே சுற்றிப் பார்க்கிறான். ஓ, தேவன் இன்னமும் மாறாதவராயிருக்கிறார்! "உன்னுடைய வலப்பக்கத்தையும், உன்னுடைய இடது புறத்தையும் நோக்கிப் பார். யாரோ ஒருவர் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்."

86 அவன் வலது பக்கமாகப் பார்த்தான். "அங்கே ஒரு சிறிய வெள்ளை வேலி உள்ளது. அது சரிதான். நான் இங்கிருந்து நகரமாட்டேன், ஏனென்றால் அங்கே அந்தப் பழைய மரம் நின்று கொண்டிருக்கிறது. நான் தரிசனத்தில் கண்டவிதமாகவே ஒவ்வொரு காரியமும் உள்ளது" என்றான். கதவு திறக்கப்பட்டு ஒரு மெலிந்த பெண்மணி வெளியே வருகிறாள்.

87 இப்பொழுது, நினைவிருக்கட்டும், அவள் இரண்டு விறகுகளை எடுக்கப் போகிறாள். அவளால் மூன்றை எடுத்திருக்க முடியாது, சிலுவையை உருவாக்க இரண்டு தேவை. அவள் இரண்டு விறகுகளை எடுத்து அதைத் தன்னுடைய கரத்தில் வைத்துக்கொண்டு, திரும்பி நடக்க ஆரம்பித்தாள், "சிறு பையன் எழும்பினவுடனே, நான் அந்தச் சிறு அடையை செய்துவிடுவேன். அதன்பின்னர் நான் அதை அவனுக்குப் போஷிப்பேன், நானாக எதையும் புசிக்கமாட்டேன். நான் என்னுடைய சிறு பையனை என் கரங்களில் வைத்துக் கொள்வேன், நாங்கள் அங்கே உட்கார்ந்து மரிப்போம்" என்று நினைத்துக் கொண்டிருந்தாள். அவள் வீட்டிற்குள் செல்லத் துவங்கினாள்.

88 அவள் வாசலில் ஒரு அந்நிய சத்தத்தைக் கேட்டாள், "ஸ்திரீயே, நீ எனக்குக் குடிக்கிறதுக்கு கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் கொண்டு வருவாயா?" கூறப்பட்டது.

89 அவள் திரும்பி, "அங்கே வாசலில் ஒரு அன்பான வயோதிக மனிதன் நிற்கிறார்" என்று அவள் நினைத்தாள். அவள் அவனை உண்மையாகவே கூர்ந்து கவனித்து, அவளுடைய கண்களிலிருந்து

வழிந்த கண்ணீரை ஒருக்கால் துடைத்திருப்பாள், அது இன்னும் மிகவும் அதிகாலையாக இருந்தது. தேவன் மிகவும் விசித்திரமான காரியங்களைச் செய்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவள் தியாகம் செய்யச் சித்தமாயிருந்தாள். தண்ணீர் பற்றாக்குறையாக இருந்தது, மூன்று வருடங்கள் ஆறு மாதங்களாக மழை பெய்யவில்லை.

90 "நீ எனக்குக் கொண்டு வருவீர்..." ஒருக்கால் அவள் என்ன செய்வாள் என்ற அவளுடைய மறுசெய்கைக்கான சோதனையைப் பார்ப்பதற்கேயாகும். "எனக்கு ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் குடிப்பதற்கு நீங்கள் தண்ணீர் கொண்டு வருவீர்களா?"

91 அவள் அவனை நோக்கிப் பார்த்தாள். "அவன் வித்தியாசமாகச் பேசுகிறான். அந்த வயோதிக மனிதனைக் குறித்து நான் வருந்துகிறேன்" என்றாள்.

92 தேவனில் உள்ள எந்த விசுவாசியும் மற்றொருவரோடு தன் எல்லைவரை பகிர்ந்துகொள்வான். ஆம். பெந்தேகோஸ்தே ஜனங்களைக் குறித்த ஒரு காரியம் அதுதான், அவர்கள் தங்கள் கொள்கைக்காகத் தங்களிடம் உள்ளதை எல்லாம் தாராளமாகக் கொடுப்பார்கள். அது சரி. அது உண்மை. அது மகத்தான காரியமாயுள்ளது, அவர்களிடத்தில் உள்ள மகத்தான காரியங்களில் ஒன்று. அவர்கள் உலகத்திலேயே மகத்தான நன்கொடையாளர்களாயிருக்கிறார்கள், ஏனென்றால் இந்தப் பூமிக்குரிய பொருட்கள் ஒன்றுமில்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பொக்கிஷங்களைப் பரலோகத்தில் சேமித்து வைத்திருக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் இந்நாட்களில் ஒன்றில் அங்கே போகப்போகிறார்கள்.

93 எனவே இந்த ஸ்திரீ, அவள், "நான் என்னுடைய தண்ணீரை பகிர்ந்து கொள்வேன். நாங்கள் மரிக்கப் போகிறோம், எனவே நான் என்னுடைய குடிநீரை தியாகம் செய்வேன், அவன் தாகமாயும், களைப்புற்றும் காணப்படுகிற காரணத்தால், அங்கே நின்றுகொண்டிருக்கிற அன்பான வயோதிக மனிதரிடம் அதைக் கொடுப்பேன்" என்றாள். அவள், "நான் அதைக் கொண்டு வருவேன்" என்றாள். அவள் தொடர்ந்து நடக்கத் துவங்கினாள்.

94 அவள் மீண்டும் ஒரு சத்தத்தைக் கேட்டாள், "உன்னுடைய மற்றொரு கையில், நீ எனக்குக் கொஞ்சம் அப்பத்தை கொண்டு வருவாயா?" ஓ, என்னே! இப்பொழுது, இப்பொழுது என்ன?

95 அவளுடைய குழந்தையின் உயிரே அவளது கடைசி நம்பிக்கையாக இருந்தது. அவர்கள் கொண்டிருந்த கடைசி நம்பிக்கை, அப்பமும் போய்விடும், எண்ணெய்யும் போய்விடும், எல்லாமே இப்பொழுது போய்விடும். ஆனால் அவள் திரும்பிப் பார்த்தாள், அவள் யோசித்தாள். அவள், "என்னிடம் ஒரு பானை மாவில் சிறிது மாவு உள்ளது. நான் அதை ஈரப்படுத்த

போதுமான எண்ணெயை வைத்திருக்கிறேன், நான் ஏற்கனவே அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறேன், அல்லது, நான் அதைக் கலந்திருக்கிறேன். (அங்கே வார்த்தையும் ஆவியும் ஒன்றாகக் கலந்துள்ளது. நான் சிலுவையை இங்கே கிடத்தி, ஜீவனை அளிக்கும்படியாக அதை ஒரு அடையாக உண்டாக்கினேன்)" என்றாள். அப்பொழுதுதான் ஆவியும் வார்த்தையும் சிலுவையின் மேல் ஒன்று சேரும்போது, அது உங்களுக்காக ஒரு ஜீவ அப்பத்தை உண்டாக்குகிறது. அது உண்மை. "நான் அதை ஒன்றாகச் சேர்த்து வைத்துள்ளேன், நான் அதைச் சுடுவதற்கு இப்பொழுது உள்ளே செல்லப் போகிறேன், அங்கே மரித்துக் கொண்டிருக்கும் என்னுடைய சிறு பையனுக்கு, சாப்பிட ஏதாவது காரியத்திற்காக இரவு முழுவதும் அழுது கொண்டிருக்க, நான்—நான் அதை அவனுக்குக் கொடுக்க வேண்டும். நான் என்னுடையதை தியாகம் செய்யப் போகிறேன், நான்—நான் அதை அவனுக்கு அளிக்கப் போகிறேன். அதன்பின்னர் நான் அவனை என் கரங்களில் ஏந்திக் கொள்வேன், நாங்கள் இருவரும் மரணத்திற்காகக் காத்திருப்போம்" என்றாள்.

96 அவன், "ஆனால், நீ முதலில், எனக்கு ஒரு சிறு அடையை உண்டாக்கு" என்றான். சாகும் தருவாயில் இருக்கும் ஒரு விதவைப் பெண்ணிடம், இறக்கும் தருவாயில் உள்ள ஒரு குழந்தையுடன், வீட்டில் அவளிடம் இருந்த கடைசி உணவுத் துணுக்கையும் ஒருவன் கேட்பது விசித்திரமாக இல்லையா? தேவன் மிகவும் விநோதமான காரியங்களைச் செய்கிறாரே! அதற்கு அவர், "முதலில் எனக்கு ஒரு சிறு அடையை உண்டாக்குவாயாக!" என்றான்.

97 அவள், "உங்களுக்குத் தெரியுமா, நாம் அந்நியர்களை உபசரித்திருக்கிறோம் என்று வேதம் சொல்கிறது. நாங்கள் அந்நியரை உபசரித்திருக்கிறோம், நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறியாமல் இருந்தோம், அவர்களோ தூதர்களாயிருந்தனர்" என்பதை படித்திருந்தாள். "சரி," அவள், "நான் அதைச் செய்வேன்" என்றாள்.

98 அவள் திரும்பியபோது, அவன், "ஏனென்றால்..." என்றான். ஓ, என்னே. அதுதான், "**கர்த்தர் உரைக்கிறதாவது**!" என்ற, எந்த ஒரு விசுவாசியும் எப்போதும் செவிகொடுத்துக் கேட்டதிலேயே மிகப்பெரிய ஆறுதலாய் இருந்தது. அந்த வார்த்தைக்காகத்தான் அவள் காத்திருந்தாள். "**கர்த்தர் உரைக்கிறதாவது**, 'தேவன் பூமியின் மேல் மழையைப் பொழியப்பண்ணும் நாள் வரைக்கும் பானை காலியாகாது, கலயமும் வறண்டு போகாது'" என்று கூறினான்.

99 நாம் அங்கே என்ன பெறுகிறோம்? முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது மற்ற யாவும் சேர்க்கப்படும். "சகோதரன் பிரான்ஹாம், எனக்கு எப்படித் தெரியும்? எனக்கு எப்படித் தெரியும்?" எனக்குத் தெரிந்த ஒரே காரியம் என்னவெனில், தேவனை முதலில் வைத்து, முன்னேறிச் செல்லுங்கள். தியாகம்! எண்ணெயைக் கலந்து,

வார்த்தையும் ஆவியும் ஒன்றாகக் கலந்து, சிலுவையின் மேல் அர்ப்பணித்து, "கர்த்தாவே, இதோ நான் இருக்கிறேன்" என்று கூறுங்கள். எல்லாவற்றிலும் தேவனை முதலில் வையுங்கள்!

100 "ஏனெனில், **கர்த்தர் உரைக்கிறதாவது,** 'தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் மழையைப் பொழியப்பண்ணும் நாள்வரை, கலயம் வற்றிப்போகாது, பானையும் காலியாகாது.'" அப்பொழுது, அது தேவனுடைய தீர்க்கதரிசி அவளிடத்தில் பேசிக்கொண்டிருந்தது என்பதை அவள் அறிந்திருந்தாள். ஓ, அவளுடைய இருதயம் எவ்வளவாய் துடித்திருக்க வேண்டும்! அவள் உள்ளே ஓடிச் சென்று அந்தச் சிறிய அடையைச் செய்து, தண்ணீரை அவனிடம் கொண்டு வந்தாள், நடுங்கும் கைகளால் அவனது அந்த வயதான, ஒடுங்கிய கன்னங்களைத் தடவியபடி, தேவன் ஒரு சிறிய அப்பத்துண்டின் பேரில் காப்பாற்ற வந்திருந்தார் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

101 ஓ, நீங்கள் தேவனுடைய அந்த ஒரு சிறு வாக்குத்தத்தத்தை எடுத்துக்கொண்டு, எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொண்டு, வழியிலிருந்து விலகி, என்ன சம்பவிக்கிறது என்பதைக் கவனியுங்கள்! அந்த இருதயத்தை…அதிலிருந்து அவிசுவாசத்தை எடுத்துப்போடுங்கள். நீங்கள் பெற்றுள்ள அந்தச் சிறிய விசுவாசத்தை எடுத்து, அதைச் சிலுவையின் மேல் வைத்து, "கர்த்தாவே, நான் பெற்றுள்ளதெல்லாம் இதுதான். அதை எடுத்துக் கொள்ளும்" என்று கூறுங்கள்; **"கர்த்தர் உரைக்கிறதாவது"** என்ற திருப்பத்தைக் கவனியுங்கள். ஓ, அவர் எப்போதும் இருந்தது போலவே இன்றைக்கும் மாறாதவராயிருக்கிறார். அதற்காகவே அவள் காத்துக் கொண்டிருந்தாள்.

102 ஒரு வேளை இப்பொழுது பயங்கரமான இருட்டாகக் காணப்படலாம், ஆனால் உங்களுக்குத் தெரியும், சில சமயங்களில் நாம் கற்பிக்கப்பட்டிருக்கிறோம், நான் அன்றொரு இரவு அதன் பேரில் பிரசங்கித்தேன், விடியலுக்கு முன்புதான் எப்போதும் இருள் அதிகமாக இருக்கும். அது இரவின் இருண்ட நேரத்தில் விடிவெள்ளி நட்சத்திரம் பிரகாசிக்கிறது, அது சூரியனின் வருகையைப் பிரதிபலிக்கிறது.

103 ஜெர்மனியில் அவர்கள் ஒரு புகைப்படத்தை வைத்துள்ளனர், அவர்கள் அதை "மேகப்" படம் என்று அழைக்கிறார்கள். லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள பாரஸ்ட் லான் என்ற இடத்தில்… சிலுவையேற்றத்தைப் பற்றிய இந்த மகத்தான படத்திற்கு இது— இது ஒரு போட்டியாயுள்ளது, (மகத்தான காட்சியானது இந்தக் கட்டிடத்தின் குறுக்கே எவ்வளவு அகலமாயிருக்கிறதோ, அவர்கள் படத்தைச் சுற்றி ஒரு கட்டிடத்தைக் கட்ட வேண்டியதாயிருந்தது; உங்களில் அநேகர் அதைக் கண்டிருப்பீர்கள்). ஆனால் ஜெர்மனியில் இது "தூதன்…" அல்லது "மேகத்தின் நாள்" என்று அழைக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் அதிலிருந்து ஒரு பகுதியை எடுத்துப் பார்க்கும்போது, ஓ, அது பார்ப்பதற்கு

மிகவும் கோரமாக இருக்கிறது, அதன் மீது ஒளி பிரதிபலிக்கும்போது, கோபமான மேகங்கள் அப்படி ஒன்றோடொன்று கலந்து திரிவது போல் தெரிகிறது. மேலும் படத்தில் ஒளிகள் பிரதிபலிக்கப்பட்ட விதம், மேகங்கள் நகர்வது போலத் தோன்ற வைக்கிறது, எல்லாவற்றையும் கிழித்தெறிய வரும் ஒரு கோபமான புயல் போல அவை காட்சியளிக்கின்றன. அதன்பின்னர் அந்த வழிகாட்டியால் உங்களிடம், "அருகில் நடந்து, அதைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டேயிருங்கள்" என்று கூறப்படுகிறீர்கள். நீங்கள் அதை உண்மையாகவே நெருங்கும்போது, அது மேகங்கள் அல்ல, அது தூதர்களின் செட்டைகள் ஒன்று சேர்ந்து அடித்து, களிகூருதலாயுள்ளது. அது மறைமுகத்தில் உள்ள ஒரு ஆசீர்வாதமாய் உள்ளது.

104 ஒருக்கால் இன்றிரவு உங்களுடைய சுகவீனமாயிருக்கலாம், ஒருக்கால் இங்கே வரவேண்டிய உங்களுடைய தியாகம் மறைமுகத்தில் உள்ள ஒரு ஆசீர்வாதமாக இருக்கலாம். தேவனுடைய தூதர்கள் தங்களுடைய செட்டைகளை ஒன்றாக இணைத்துக் களிகூரும்படிக்கு இங்கே இருக்கிறார்கள், ஏனென்றால் அது வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது, "ஒரு பாவி மனந்திரும்பும்போது பரலோகத்தின் தூதர்கள் களிகூருகிறார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால், **கர்த்தர் உரைக்கிறதாவது**, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவருடைய கிருபை தீர்ந்துபோக முடியாது. உங்களுடைய இருதயங்கள் வாஞ்சிக்கிற எதையும் அவர் உங்களுக்கு அளிக்கச் சித்தமாயிருக்கிறார்.

105 இப்பொழுது நாம் நம்முடைய தலைகளை ஜெபத்தில் வணங்கியிருக்கையில், நாம் ஒரு நிமிடம் ஜெபிப்போமாக. நீங்கள் ஒரு ஜெப மனப்பான்மையில் தரித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இங்கு இப்போது யாராவது இருக்கிறீர்களா (உங்களுடைய கண்களை மூடி, உங்களுடைய தலைகள் நீங்கள் எடுக்கப்பட்ட மண்ணை நோக்கி வணங்கியிருக்கையில்; இயேசுவானவர் வரத் தாமதித்தால், நீங்கள் மண்ணுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறீர்கள்) நீங்கள் இரட்சிக்கப்படவில்லையென்றால், நீங்கள் உங்களுடைய கரத்தை *அந்தளவு* உயர்த்தி, "சகோதரன் பிரான்ஹாமே, என்னுடைய ஜீவியமும் கூட ஒரு துயரமான வாழ்க்கையாகவே இருந்து வருகிறது, நான் இரட்சிக்கப்படவில்லை. இன்றிரவு உங்களுடைய ஜெபங்களில் என்னை நினைவுகூருங்கள், சகோதரனே, நான் என்னுடைய கரத்தை உயர்த்துவேன்" என்று கூறுவீர்களா? இங்குள்ள அந்த நபர், பையனோ, பெண்ணோ, ஆணோ அல்லது பெண்ணோ, இரட்சிக்கப்படாதவரா? நான் இனிமேல் உங்களிடத்தில் கேட்கமாட்டேன், நான் உங்களுக்காக ஜெபிக்கும்படியாக இப்பொழுது உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள்.

106 எனக்கு வலப்புறம், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களையும், உங்களையும், உங்களையும் ஆசீர்வதிப்பாராக. வேறு எங்கோ, பின்னால், இங்கே எங்கோ நடுப் பாதையில், உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். எவருமே நோக்கிப் பார்க்க வேண்டாம், நானும் பரிசுத்த ஆவியானவரும் இதை நோக்கிப் பார்க்கட்டும். இப்பொழுது, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது நல்லதுதான்.

107 வேறு யாராகிலும் நடுப் பாதையில் உங்கள் கரத்தை உயர்த்தி, “சகோதரன் பிரான்ஹாம், நான் ஒரு கிறிஸ்தவன் அல்ல. பரிசுத்த ஆவி இனி ஒருபோதும் என்னைத் தொலைப்படுத்தக் கூடாதபடிக்கு நான்—நான் அவரை என்னிடத்திலிருந்து தூரமாய் தள்ளிவிட்டிருக்கிறேன். ஆனால், உண்மையாகவே, நான் தவறாயிருக்கிறேன் என்பதை நான் அறிவேன். நான் ஒருபோதும் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்திருக்கவில்லை என்பதை நான் அறிவேன். நான்—நான் தகுதியற்றவன் என்பதை நான் அறிவேன். நான் எதையும் பெற்றிருக்கவில்லை… என்னுடைய எல்லா காரியங்களையும் நான் அறிக்கை செய்யவில்லை. தேவனுடைய தேவைகள் அனைத்தையும் நான் சந்தித்திருக்கவில்லை” என்று கூறுங்கள்.

108 நீங்கள் சுகவீனமாயிருக்கலாம். நீங்கள் தேவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை அது எந்த நன்மையும் செய்யாது. “சகோதரன் பிரான்ஹாம், நான் நீண்ட காலமாகக் கிறிஸ்தவ மார்க்கத்தை அறிக்கையிட்டு வந்துள்ளேன், ஆனால் உண்மையாகவே நான் தெய்வீக சுகமளித்தலை எப்பொழுதுமே சந்தேகித்து வந்துள்ளேன். இந்தப் பரிசுத்த ஆவியானவர் சொன்னது சரிதானோ என்று நான்—நான் சும்மா யோசித்துக் கொண்டிருந்தேன்.” ஓ, அன்புள்ள சகோதரி, அல்லது, அன்புள்ள சகோதரனே, நீங்கள் அதைப் போன்று ஒருபோதும் தேவனிடத்திலிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது. இல்லை. நீங்கள் ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டும், அதன்பின்னர் நீங்கள் தேவனோடு சரியாக இருக்கிறீர்கள் என்று நிச்சயமுடையவர்களாயிருங்கள். அப்படியானால் அவருடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொண்டு, அதைப் பற்றிக் கொள்ளுங்கள்.

109 என்னுடைய இடப்பக்கத்தில், அங்கே உள்ளே யாராவது இருக்க முடியுமா? அங்கே பின்னால் உள்ள வாலிபராகிய உங்களில் சிலர், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லாவிடில், உங்களுடைய கரத்தை உயர்த்தி, “சகோதரன் பிரான்ஹாம், என்னை நினைவு கூருங்கள்” என்று கூறுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, நான் உங்களுடைய கரங்களைக் காண்கிறேன், மிகவும் பின்னால், மிகப் பின்னால், உன்னைப் பார்க்கிறேன் பெண்மணியே; இங்கே பின்னால், ஆமாம். அந்தப் பக்கம், வெகு தொலைவில் இங்கே, ஆம்,

அந்தச் சிறுமி. ஆம், ஆம், கர்த்தர் அங்கே உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக. அது நல்லதுதான்.

110 இப்பொழுது, நீங்கள் உங்களுடைய கரங்களை உயர்த்தும்படி, நான் உங்களிடம் கேட்பதெல்லாம் அவ்வளவுதான் என்று நான் உங்களுக்கு வாக்களித்துள்ளேன். இப்பொழுது நாம் ஜெபிக்கப் போகிறோம். இப்பொழுது நாம் இதைச் செய்வதற்கு முன்பு, பாவிகள் தங்களுடைய கரங்களை உயர்த்தியிருப்பதற்குப் பிறகு, ஏறக்குறைய இருபது அல்லது முப்பது பேர், எத்தனைபேர் சுகவீனமாய் இருக்கிறீர்கள், உங்களுடைய கரத்தை உயர்த்தி, "சகோதரன் பிரான்ஹாம், உங்களுடைய ஜெபங்களில் என்னை நினைவுகூருங்கள், அதாவது தேவன் என்மீது இரக்கமாயிருக்கும்படிக்கு, என்னைச் சுகப்படுத்த வேண்டும்" என்று கூறுவீர்களா? அவர்களில் இருநூறு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருக்கலாம் என்று நான் யூகிக்கிறேன். சரி.

நாம் ஜெபிப்போமாக.

111 எங்கள் பரலோகப் பிதாவே, இந்த வேண்டுகோள்களோடு உம்மிடம் வருவது மிகவும் கிருபையாயுள்ளது. [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] "…எனக்கு, நான் உங்கள் சிருஷ்டிகர்." அவர்கள் தங்களுடைய கரங்களை உயர்த்தினர், அப்பொழுது அது ஆவியானது விஞ்ஞானத்தைக் காட்டிலும் மகத்தானது என்பதையே காண்பிக்கிறது. பிதாவே, நீர், "என் பிதா ஒருவனை முதலில் இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். என்னிடத்தில் வருகிற யாவருக்கும் நான் நித்திய ஜீவனை அளிப்பேன்" என்றீர். இப்பொழுது கர்த்தாவே, அவர்கள் உம்முடையவர்கள். இப்பொழுதே அவர்கள் தங்களுடைய இருக்கைகளில் அமர்ந்துள்ள இடத்தில், அவர்களுக்கு ஜீவனை அளியும். அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்களாக. கடைசி நாளில் நீர் அவர்களை எழுப்பி, பரலோகத்தின் பிதாவாகிய தேவனுக்கு அவர்களைச் சபையின் கிரீடத்தில் இரத்தினங்களாக அளிக்க வேண்டும். பிதாவே, இதை அருளும்.

112 நான் சுகவீனமாயும், அவதியுறும் இவர்களுக்காக ஜெபிக்கிறேன். இன்றிரவு அவர்களில் பலரின் கைகள் உயர்ந்தன, ஏனென்றால் ஒரு ஸ்திரீக்கு உண்மையாகவே தேவன் தேவைப்பட்டதை அவர்கள் கண்டனர்; அவள் அந்த முக்கியமான நேரங்கள் வருவதைக் கண்டாள். சந்தேகமின்றி, இங்கும் பலர் அதே நிலையில் இருக்கிறார்கள், அவர்கள் மரிக்கப் போகிறார்கள், ஆனால் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு ஏற்கனவே கட்டளையிட்டிருக்கிறார், எல்லாமே சரியாக இருக்கிறது. அது நன்றாக வேலை செய்யும். அவர்கள் எல்லாமே சரியாக இருக்கிறது என்று நிச்சயமுடையவர்களாயிருந்தால், அப்பொழுது அவர்கள் தேவனைக் குறித்து நிச்சயமுடையவர்களாயிருக்கிறார்கள். அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொள்கிறார் என்று அவர்கள்

நிச்சயமுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படியானால், பிதாவே, நீர் உம்முடைய அன்பான, சுகவீனமான பிள்ளைகளாக உள்ள அவர்களோடு இன்றிரவு இடைபட வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்; அவர்களுடைய உபாதிகளைச் சுகப்படுத்தி, அவர்களுக்கு வல்லமையையும், கிருபையும், விசுவாசத்தையும் அளியும். பிதாவே, செய்யும்.

113 இன்றிரவு இங்குள்ள எல்லா ஊழியக்காரர்களையும், உம்முடைய விலையேறப்பெற்ற தீர்க்கதரிசிகளையும் ஆசீர்வதியும். கர்த்தாவே, நீர் இவர்களை அபிஷேகிக்க வேண்டும் என்றும், அவர்கள் இந்த ஜனங்களின் வீடுகளை ஆசீர்வதிப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் உயிரோடிருக்கும் வரை அவர்களுடைய வீடுகளில் ஜீவ அப்பம் இருக்குமாறும் நாங்கள் ஜெபிக்கிறோம். அவர்களுடைய கலயம் ஒருபோதும் வறண்டு போகாமலும், அல்லது பானைகள் காலியாகாமலும் இருப்பதாக. இந்தத் தேசம் முழுவதிலும் உள்ள ஒவ்வொரு சபையிலும் ஆவிக்குரிய அப்பம் இருப்பதாக, கர்த்தாவே, அது தேவையுள்ள பசியுள்ளவர்களைப் போஷிக்கும். கர்த்தாவே, அதை அருளும்.

114 நாங்கள் உம்மை நேசிக்கிறோம். நீர் முதலில் எங்களில் அன்பு கூர்ந்தீர் என்பதை நாங்கள் அறிவோம், ஏனென்றால் நாங்கள் பாவிகளாயிருந்தபோதே, எங்களைத் தேவனோடு திரும்ப ஒப்புரவாக்கும்படியாக, எங்களுடைய பாவங்களின் கிருபாதார பலியாயிருக்கும்படிக்கு, குற்றமுள்ளவர்களுக்காகக் குற்றமற்றவராக, கிறிஸ்து எங்களுக்காக மரித்தார்; நாங்கள் தேவனும் அவருடைய குமாரனுமின்றி, ஏதேன் தோட்டத்திலிருந்து வழிதவறித் தொலைந்தபோது, எங்களுடைய பிதாக்களின் மீறுதல்கள் எங்களைப் பாவத்தின் குழப்பத்திற்குள் கொண்டுவந்தன. இயேசு எங்கள்மீது மிகுந்த அன்பு கொண்டதால், தேவனுடைய சித்தத்தின்படி வந்து, கல்வாரியில் தம்முடைய ஜீவனையே பலியாகக் கொடுத்து, எங்களை மீண்டும் தேவனிடம் மீட்டுக்கொண்டார். பிதாவே, உமது எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி.

115 நாங்கள் முடிவு காலத்தின் நிழல்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாளை இரவு என்று ஒன்று இல்லாமல் போகலாம். எனக்குத் தெரியாது, கர்த்தாவே, இது உமக்கே உரியது. பிதாவே, இன்றிரவு சிலர் உள்ளே பிரவேசிப்பது சாத்தியமாயிருக்கையில், நீர் பரிசுத்த ஆவியை அனுப்ப வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

116 நீர், “சோதோமின் நாட்களில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்” என்று கூறினீர். சோதோமின் நாட்களில், அவர்கள் மூன்று வகுப்பினரை உடையவர்களாயிருந்தனர்: பாவி, வெதுவெதுப்பான சபை அங்கத்தினர், தெரிந்து

கொள்ளப்பட்டவர்கள் (அழைக்கப்பட்டவர்கள்); சோதோமியர்கள், லோத்தியர்கள், ஆபிரகாமினுடையவர்கள் (உலகத்திலிருந்து அழைக்கப்பட்டவர்கள்). சோதோமியர்கள் ஒரு மகத்தான செய்தியோடு இரண்டு ஊழியக்காரர்களைப் பெற்றுக் கொண்டனர். ஆபிரகாமின் குழுவினர் ஒரு அடையாளத்தைப் பெற்றுக்கொண்டனர், அந்த அடையாளம் தம்முடைய ஆடைகளில் புழுதியையுடைய ஒரு மனிதன், அவர் ஆபிரகாமை அறிந்திருந்தார், ஒரு அந்நியராய் இருந்தும்; அவனுடைய மனைவி சாராள், அவளுடைய பெயர் என்னவென்பதை அறிந்திருந்தார்; சாராள் இருந்த கூடாரப் பக்கமாகத் தன்னுடைய முதுகு திரும்பியிருப்பதோடு ஆபிரகாமிடம், “அவள் ஏன் நகைத்தாள்?” என்று கேட்டார். ஓ தேவனே, சபையானது விழித்தெழுந்து பார்க்கட்டும்! இயேசு, “சோதோமின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வருகையிலும் நடக்கும்” என்று கூறினார். அதே தேவன் தம்முடைய சபையின் மாம்சத்தில் தோன்றி, அதே அடையாளத்தைக் காண்பிப்பார். கர்த்தாவே, இன்றிரவு அதை மீண்டும் அருளும். நாங்கள் இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

> நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை
> நேசிக்கிறேன்

இப்பொழுது அவரை இனிமையாக ஆவியில் ஆராதியுங்கள்.

> ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்
> சம்பாதித்தார் என் இரட்சிப்பை
> கல்வாரி மரத்தினிலே.

117 ஓ, ஒரு செய்திக்குப் பிறகு, நீங்கள் முழுவதும் தேய்த்துக் கழுவப்பட்டதாக உணரவில்லையா? பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தை எல்லா அவிசுவாசத்தினின்றும் சுத்திகரித்து, உங்களை மீண்டும் தேவனோடு சரியான பாதையில் வைக்கிறார். ஓ, இப்பொழுதே அவரை ஆராதிப்பதற்கான நேரமாயுள்ளது. செய்தி முடிந்துவிட்டது, எனவே *நான் அவரை நேசிக்கிறேன்* என்று பாடுகையில், இந்தப் பாடலில் நாம் அவரை மீண்டும் ஒருமுறை ஆராதிப்போமாக. ஒவ்வொருவரும், இப்பொழுது அமைதியாகவும் இனிமையாகவும் இருங்கள். உங்களுடைய கண்களை மூடி, உங்களுடைய ஆவிக்குரிய கண்களால் அவரை நோக்கிப் பாருங்கள், அவர் அந்த விதவைக்கு என்ன செய்தார் என்பதைப் பாருங்கள். நீங்கள் அந்த விதவையைப் போலவே அவருக்கு மிகவும் பிரியமானவர்களாயிருக்கிறீர்கள், அவர் உங்களுடைய ஜீவனைக் கூடக் காத்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் அவரை நேசிக்கவில்லையா?

> நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை
> நேசிக்கிறேன்

ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்
சம்பாதித்தார் என் இரட்சிப்பை
கல்வாரி மரத்தினிலே.

மகத்தான வைத்தியர் இப்பொழுது அருகில் இருக்கிறார்,
பரிவுள்ள இயேசு;
அவர் சோர்வுற்றுள்ள இருதயத்திற்கு உற்சாகமூட்டிப் பேசுகிறார்,
இயேசுவைத் தவிர வேறு நாமம் இல்லை.

சேராபீன் பாடலில் மிக இனிமையான சுருதி,
அழிவுள்ள நாவில் மிகவும் இனிமையான நாமம்,
எப்போதும் பாடப்பட்டதிலேயே மிகவும் இனிமையான பாடல்,
ஓ, இயேசு, விலையேறப்பெற்ற இயேசு.

118 அவர் அதை இசைப்பெட்டியில் மென்மையாக வாசித்துக்கொண்டிருக்கையில். [சகோதரன் பிரான்ஹாம் *மகத்தான வைத்தியர்* என்ற பாடலை வாய் திறவாமல் பாடுகிறார்—ஆசி.] நான் அந்தப் பாடலைக் கேட்கும்போது, அது எனக்கு ஒரு காரியத்தைக் கொண்டு வருகிறது. சிறிது காலத்திற்கு முன்பு, இந்தியானாவின் ஃபோர்ட் வெய்னில், ஒரு சிறிய டங்கார்ட் சிறுமி இசைப்பேழையை வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் பெந்தெகொஸ்தேயினராக இருக்கவில்லை, ஆனால் அவளுக்குப் பின்புறம் நீண்ட அழகான முடி இருந்தது. நான் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப் போவதாயிருந்தேன், அந்த வரிசையில் முதலில் வந்தவன் ஒரு சிறு பையன், அவன் ஒரு இளம்பிள்ளை வாத நோயினால் முடமாயிருந்தான். நான் அந்தச் சகோதரியின் கரங்களிலிருந்து சிறு பையனைத் தூக்கி, அந்தச் சிறு பையனைப் பிடித்து, நான், “மெய்யாகவே மகத்தான வைத்தியர் இங்கிருக்கிறார், எல்லா இருதயங்களின் இரகசியங்களையும் அறிந்திருக்கிறார்” என்று கூறினேன்.

மேலும் நான், பல ஆயிரம் பேர் கொண்ட பார்வையாளர் கூட்டத்திடம், “நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?” என்று கேட்டேன்.

119 “ஆம்,” அவர்கள் எல்லோரும் அதை விசுவாசித்தனர். ஆனால், கூட்டத்தின் முதல் இரவில் அவர்கள் சற்றுத் தயங்கிக்கொண்டிருந்தார்கள், மேலும் அந்தச் செய்தியைப் புரிந்துகொள்வது அவர்களுக்குக்…கடினமாக இருந்தது.

120 மேலும் நான், “கர்த்தராகிய இயேசுவால் இந்தச் சிறு பையன் யார் என்றும், அவனுடைய பெயர் என்ன என்றும் என்னிடம் கூற முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிப்பீர்களா? ஆபிரகாமைச் சந்தித்த, சாராள் என்ன செய்தாள் என்பதை

அறிந்திருந்த அதே தூதன்...நாத்தான்வேல் வந்தபோது அவனை அறிந்திருந்த அதே இயேசுவானவர், பேதுருவை அறிந்து, அவன் பெயரைச் சொல்லி அழைத்த, கிணற்றண்டையில் இருந்த ஸ்திரீயிடம் இந்த எல்லாக் காரியங்களையும் கூறின அதே இயேசுதானா அவர்? அது அதே இயேசுவாக இருக்குமா?” அவர்கள் யாவரும் தங்களுடைய கரங்களை உயர்த்தினபோது, அது அவ்வாறு இருக்கும் என்று அவர்கள் எண்ணினர்.

121 பரிசுத்த ஆவியானவர் இதை வெளிப்படுத்தத் துவங்கினார். அவர் அப்படிச் செய்தபோது, அந்தச் சிறுவன் என் கைகளிலிருந்து குதித்து, கீழே ஓடிச் சென்று மேடையிலிருந்து கீழே குதித்தான். அந்தத் தாய் சிறு பையனுக்கு முன்னால் அமர்ந்திருந்த நாற்காலியில் மயங்கி விழுந்தாள். அந்தச் சிறு பையன் மேலும் கீழும் ஓடினான். அந்த அமிஷ் பெண், அல்லது அது டன்கார்ட், இசைப்பேழையை வாசித்துக் கொண்டிருந்தாள், அவள் முகம் வெளிறிப் போய், கூட்டத்தின் நடுவில் குதித்தெழுந்தாள், அவளுடைய தலைமுடி அவளுக்கு முதுகின் மேல் விழுந்தது. அவள் ஒரு வெள்ளை ஆடை உடுத்தியிருந்தாள். அவள் ஒரு தேவதூதன் போல் காணப்பட்டாள். அவள் அதை அந்நிய பாஷையில் பாடத் துவங்கினாள். மேலும், அவள் அதைச் செய்தபோது, இசைப்பேழை ஒரு சுரத்தையும் தவறாமல் இசைத்தது:

> மகத்தான வைத்தியர் இப்பொழுது அருகில் இருக்கிறார்,
> பரிவுள்ள இயேசு;
> அவர் சோர்வுற்ற இருதயங்களுக்கு உற்சாகமூட்டிப் பேசுகிறார்,
> இயேசுவைத் தவிர வேறு நாமம் இல்லை.

122 ஜனங்கள் பீடத்தைச் சூழ்ந்து கொண்டு, அழுதுகொண்டும், நடைபாதைகளில் விழுந்து கொண்டும், “தேவனே எனக்கு இரங்கும்!” என்று கதறினார். ஓ, என்னே ஒரு கூட்டம் அங்கே இருந்தது!

123 அந்த மகத்தான வைத்தியர் இன்னமும் இங்கே இருக்கிறார். அவர் தவறிப்போகவில்லை. அவர் ஒருபோதும் தவறிப்போக முடியாது. இப்பொழுது, இங்குள்ள எத்தனை பேர் அதைப் பயபக்தியோடு, உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்கள், தேவனுடைய வல்லமையினால் சுகமடைவதற்கான எதிர்பார்ப்புகளோடு நீங்கள் இன்றிரவு இங்கே இருக்கிறீர்களா?

124 இங்கே இருக்கும் இந்தப் பையன்கள் தவிர, இந்தக் கட்டிடத்தில் எனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால், அன்றொரு நாள் நான் ஆர்கன்சாஸிலிருந்து ஒரு நேர்காணலின்போது பேசினேன்; சகோதரன் பேட் டைலர், மனமாற்றமடைந்த ஒரு கொள்ளைக்

கூட்டத்தான்; சகோதரன் வில்லியம்ஸ் அங்கே அமர்ந்திருக்கிறார்; என்னால் முடிந்த வரையில்…என் நண்பரான சகோதரன் ஜீன் கோட் இங்கே அமர்ந்திருக்கிறார். இந்த நேரத்தில் எனக்குத் தெரிந்த கட்டிடத்தில் நான் காண்கிறதெல்லாம் அவ்வளவுதான் என்று நான் யூகிக்கிறேன். ஆனால் இந்த வழியில் இங்கு அமர்ந்துள்ள இந்த ஜனங்களை நான் அறிவேன்.

125 இப்பொழுது, நான் ஒரு கரத்தில் குரானையும், மற்றொரு கையில் வேதாகமத்தையும் ஏந்திக் கொண்டு, "ஒன்று சரியாக இருக்க வேண்டும், மற்றொன்று தவறாக இருக்க வேண்டும்" என்று கூறி ஒரு லட்சம் பேருக்கு முன்பாக நின்றிருக்கிறேன். எல்லா மதங்களுக்கு மத்தியிலும் கிறிஸ்தவ மார்க்கம் மாத்திரமே உள்ளது; முழு சுவிசேஷம் மாத்திரமே அவர்களுக்கு மத்தியில் இயேசு கிறிஸ்து இன்னமும் ஜீவிக்கிறார் என்று நிரூபிக்க முடியும். மற்றவர்கள் வேத சாஸ்திரத்தை உடையவர்களாயிருக்கிறார்கள், அவர்கள் அதைக் குறித்து உங்களிடம் கூறுவார்கள், "நாங்கள் அவ்வளவு உளவியலைப் பெற்றுள்ளோம்." முகமதியர்கள், "நாங்கள் அதே அளவு உளவியல் பெற்றுள்ளோம். நீங்கள் உங்களுடைய இயேசுவைக் குறித்து உரத்த சத்தமிடுவது போல எங்களுடைய தீர்க்கதரிசியின் பேரிலும் நாங்கள் சத்தமிட முடியும். ஆனால் எங்களுடைய தீர்க்கதரிசியோ எங்களுக்கு எதையும் வாக்குத்தத்தம் பண்ணவில்லை. உங்களுடைய இயேசுவானவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து, அவர் உங்களுக்குள்ளாக ஜீவிக்கிற காரணத்தால் அவர் செய்த காரியங்களை நீங்களும் கூடச் செய்வீர்கள். இப்பொழுது நீங்கள் எங்களுடைய தீர்க்கதரிசி மரித்துவிட்டார், அங்கே கல்லறையில் இருக்கிறார், நீங்கள் ஒரு உயிர்த்தெழுந்த இயேசுவைப் பெற்றுள்ளீர்கள் என்று கூறுகிறீர்கள். அவர் செயல்படுவதை நாங்கள் காண்போமாக" என்கின்றனர். அவர்கள்…செய்யமாட்டார்கள்…

126 நீங்கள் இங்குள்ள சில இறையியலாளர்களுடன், சில கிரேக்க வார்த்தைகள் அல்லது உங்களுக்கே குழப்பமாக இருக்கும் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிக்கலாம், ஆனால் அவர்களில் சிலருடன் ஒருபோதும் அதை ஒரு நேரடி மோதலுக்குக் கொண்டு செல்ல முயற்சிக்காதீர்கள். நீங்கள் எதைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பது மேலானதாகும். நீங்கள் அறிந்திருப்பது நலம். அந்தக் காரணத்தினால்தான் மிஷனரிமார்களை அங்குக் கொண்டு செல்வது கடினமாக உள்ளது. அவர்கள் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். நீங்கள் அதை அறிந்து கொள்வது நல்லது, ஏனென்றால் அவர்கள் இதைப் பற்றி உங்களை நிரூபிக்கும்படி கேட்கப் போகிறார்கள்.

127 ஆனால் நண்பர்களே, நம்முடைய இயேசுவும், அவர் அளித்துள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் சத்தியமாயிருக்கிறது

என்பதை அறிந்துகொள்வதற்கு நான் இன்றிரவு மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். என்னால் இங்குள்ள எவரையாவது சுகப்படுத்த முடிந்தால், நான் அதைச் செய்வேன்; நான் அதைச் செய்யாமலிருந்தால், நான் ஒரு மாய்மாலக்காரனாயிருப்பேன். ஆனால் என்னால் முடியாது. ஆனால் தேவன் வாக்குத்தத்தம் செய்த ஒரு வரத்தைச் சபைக்கு அளித்துள்ளார்.

128 அதாவது லூத்தரின் நாட்களில், நாம் நீதிமானாக்கப்படுதலினால் வாழ்ந்தோம். வெஸ்லியின் நாட்களில், நாம் பரிசுத்தமாகுதலினால் ஜீவித்தோம், சபையானது சிறுபான்மையாகிவிட்டது. பெந்தேகோஸ்தே நாட்களில், நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் வரங்களைத் திரும்ப அளித்தல் மூலம் வாழ்ந்து வந்தோம். இப்பொழுது நாம் உண்மையாகவே சிறுபான்மையினராகிய தேவனுடைய குமாரனுடைய வருகையில் இருக்கிறோம். *இங்கே* அவர்கள் விசுவாசத்தினால் விசுவாசித்தார்கள்; *இங்கே* அவர்கள் பரிசுத்தமாக்கப்படுதலின் கீழ் சத்தமிட்டனர்; *இங்கே* அவர்கள் ஒரு வரமாக அந்நிய பாஷைகளில் பேசினார்கள்; ஆனால் *இப்பொழுது* எதிர்மறையும், நேர்மறையும், கூர்நுனிக்கோபுரத்தின் மேல் தலைக்கல் வந்து கொண்டிருக்கிறது, இதுவே முடிவு நேரமாயுள்ளது, கிறிஸ்துவும் அவருடைய சபையும் ஒரேவிதமாக இருக்கும்போது, அது மெதோடிஸ்டு, லூத்தரன் சபையிலிருந்து மரித்தோரை அழைக்கப் போகிறது, அங்கே பின்னால் உள்ள யாவருக்கும், ஒரு உயிர்த்தெழுதல் உண்டாகும். முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம் ஜாமங்களில் நித்திரையடைந்தவர்கள், இந்நாட்களில் ஒன்றில் எழும்பி ஆகாயத்தில் இயேசுவை சந்திப்பர். நண்பர்களே, நேரம் வந்துவிட்டது, கர்த்தருடைய வருகை சமீபமாயுள்ளது.

129 நாம் எருசலேமை நோக்கிப் பார்க்கிறோம், நமது நிமித்தமாக யூதர்கள் குருடாக்கப்பட்டிருந்தனர் என்பதை நாம் காண்கிறோம். அத்திமரமானது துளிர்விடுகின்றது. அவர், “மற்ற மரங்களையும்” என்றார். பில்லி கிரஹாம் பெயரளவிலான ஜனங்கள் மத்தியில் ஒரு—ஒரு எழுப்புதலை ஏற்படுத்தியிருக்கிறார். ஓரல் ராபர்ட்ஸ் பெந்தேகோஸ்தேயினரிடையே ஒரு எழுப்புதலை ஏற்படுத்தியிருக்கிறார். இப்பொழுது தேவகுமாரனாகிய இயேசு, தலைக்கல்லுக்காக மக்களை இழுத்து, தேவகுமாரனைத் திரும்பக் கொண்டுவந்து, கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கான காரியத்தை நிறைவுசெய்ய, இந்த மீதியான கூட்டத்தினரிடம் வந்திருக்கிறார். அவர், “சோதோமின் நாட்களில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்” என்றார்.

130 நீங்கள் காண வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, நான் என்னுடைய முதுகை உங்களுக்குத் திருப்பிக் கொள்வேன். இப்பொழுது, நினைவிருக்கட்டும், அது அந்த மனிதன் அல்ல. அங்கே அமர்ந்திருந்த மனிதன், கால்சியம், பொட்டாஷ் மற்றும்

பெட்ரோலியம் ஆகிய உலகின் பதினாறு தனிமங்களாக இருந்ததைக் கொண்டு தேவன், “ப்யூ!” என்று ஒன்றாக ஊதி, அதற்குள் அடியெடுத்து வைத்து ஜீவித்துக் கொண்டிருந்தார்.

131 இயேசு கிறிஸ்துவும் அதேக் காரியமாய் இருந்தார். அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார். அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாயிருந்தார், ஆனால் அவருடைய மாம்சமோ மனிதனாயிருந்தது, அவருடைய ஆவி தேவனாயிருந்தது. அதன்பின்னர் அவர் தம்முடைய சபைக்குள் வருவார் என்று கடைசி நாட்களில் வாக்குப்பண்ணினார். “இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது; ஆயினும் நீங்கள் என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் உங்களோடும், உங்களுக்குள்ளும் கூட இருப்பேன். நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்” என்றார். பார்த்தீர்களா? இப்பொழுது அந்த மகத்தான வைத்தியர் இங்கே இருக்கிறார்.

132 அவர் இப்பொழுது, “சோதோம் கொமோராவின் அடையாளம்” என்றார். இப்பொழுது, அது என்ன? நம்முடைய செய்தித்தாள்களைப் பாருங்கள், “ஓரினப் புணர்ச்சிக்காரர்கள், தாறுமாறாட்டம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் நாற்பது சதவிகிதம் அதிகரித்துவிட்டது” என்று கூறப்பட்டுள்ளது. பல இடங்களில் பூமியதிர்ச்சிகள், வருகையின் எல்லாவிதமான அடையாளங்களும் உள்ளன. சபை சீரழிந்து கொண்டிருக்கிறது, இங்கே கடைசி நேரம்.

133 இப்பொழுது நாம் பிரசங்கித்து வந்துள்ளபடியால், தேவன் தம்முடைய அடையாளங்களையும் கூடக் காண்பித்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுது, இந்த வேதாகமம் உண்மையானால், அது உண்மையானதுதான், நான் அந்த நோக்கத்திற்காக மரிக்க ஆயத்தமாயிருக்கிறேன். வேதம் உண்மையாயுள்ளது. இயேசு கிறிஸ்து ஜீவிக்கிறார். நாம் அவருடைய சபையாய், அவருடைய ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள், அப்பொழுது நமக்குள் இருக்கும் அவருடைய ஜீவன், அவர் தேவ குமாரனில் வாழ்ந்த அதே ஜீவனையே பிறப்பிக்கும், பரிசுத்த ஆவியானவர்—தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் நமக்குள் ஜீவித்திருந்தால்.

134 தேவனுடைய மகிமைக்காகவும், சபையின் நிமித்தமும், உங்களுடைய நோய்க்காக, நோயுற்றுத் துன்புறும் நீங்கள், அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு, என் மூலமாக அவரைச் சொல்ல வைக்க முடியுமா என்று பாருங்கள், அவருடைய ஊழியக்காரன் என்ற முறையில், அவருடைய வஸ்திரத்தைத் தொட்ட அந்த ஸ்திரீக்கு அவர் செய்தவிதமாகவே உங்களை அழைக்கிறார். கர்த்தர் அதை அருளுவாராக. அது உங்களை மகத்தாக விசுவாசிக்கச் செய்து, உங்களுடைய சுகமளித்தலை ஏற்றுக்கொள்ளச் செய்யுமா? தேவன் உங்களை அந்தவிதமாக

அழைத்தாலோ, அல்லது அவர் அழைப்பதைக் காண்பதாலோ, அவர்களால் தங்களுடைய சுகமளித்தலை ஏற்றுக்கொள்ள முடியும் என்று எத்தனை பேர் விசுவாசிக்கிறீர்கள்? உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். கர்த்தர் அதை அருளுவாராக.

அந்த *மகத்தான வைத்தியர்* என்ற பாடலை இசைத்துக் கொண்டேயிருங்கள், நீங்கள் இசைப்பீர்களா? நான் அதைச் செய்யும்படி வழிநடத்தப்பட்டதை உணருகிறேன்.

135 உங்களை நோக்கிப் பார்க்கும்படியாக, நான் மீண்டும் இன்றிரவு இங்குள்ள என்னுடைய நண்பர்களிடம் திரும்பப் போகிறேன். சகோதரர்களே, நான் உங்களிடம்…முயற்சிக்கவில்லை…சகோதரன் டேவிட், தேவனே என்னுடைய சாட்சியாயிருக்கிறார். நான் அதை நிச்சயமாகவே ஜனங்களுக்குப் போதுமான அளவு தெளிவாக்கியுள்ளபடியால், அது நானல்ல. எனக்கு அதனோடு எந்தச் சம்மந்தமும் கிடையாது. நான்…தேவன் யாரோ ஒருவரை உபயோகிக்க வேண்டியதாயிருந்தது. அவர்…எந்தக் கரங்களும் பாத்திரவானல்ல, ஆனால் தேவனே அவர்களைப் பாத்திரராகச் செய்கிறார். பாருங்கள், உலகத்தோற்றத்திற்கு முன்னரே அவர்—அவர்—அவர் தெரிந்துகொள்கிறார், அவருடைய நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும், அது நிறைவேற்றப்பட வேண்டும், அது செயல்படுத்தப்பட வேண்டும்.

136 சபையானது கறைதிரையற்றதாய் இருக்கப் போகிறது. தேவனுடைய கிருபை அதைச் செய்யும். அது அப்படித்தான் இருக்க வேண்டும், அதற்குக் கிருபை தேவைப்படும். சாராள் அவரைச் சந்தேகித்தபோது, அவர் ஆபிரகாமுடன் பேசினார். பாருங்கள், அப்பொழுதே அவர் கொன்று போட்டிருப்பார்; சாராள் சந்தேகப்பட்டதற்காக அப்பொழுதே அவர் கொன்றிருப்பார், ஏனென்றால் அதுவே மிக மோசமான பாவமாயுள்ளது, அது அவிசுவாசம், ஒரே பாவம். தூதன் கூடாரத்தினூடாக அவளைப் பகுத்தறிந்தபோது, அவள் தனக்குள்ளே சந்தேகப்பட்டு நகைத்தாள். அது சரியா? ஆனால் ஏன் அவரால் சாராளைக் கொல்ல முடியவில்லை? அவள் ஆபிரகாமின் ஒரு பாகமாயிருந்த காரணத்தால், அவர் ஆபிரகாமையும் கூடக் கொல்ல வேண்டியிருக்கும். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும்போது, நாம் இயேசுவின் ஒரு பாகமாக இருக்கிறோம். அவள் செய்ததுபோல நாமும் அறியாமையால் அதைச் செய்தால், நம்முடைய அவிசுவாசங்கள் மன்னிக்கப்படுகின்றன, ஏனென்றால் அவள் பயமடைந்தாள்.

137 ஏதோ ஒன்று மேடையின் மேல் தோன்றிக் கொண்டிருக்கிறது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஓ, நான் இதை விளக்கிக் கூற விரும்புகிறேன். நான் திரும்ப வேண்டும். தோல் எரிச்சல் கொண்ட ஒரு ஸ்திரீயை நான் காண்கிறேன், நீங்கள் அவரைத் தொட்டீர்கள். அது உங்களை விட்டுப் போய்விடும், ஏனென்றால் உங்களைச்

சுற்றிலும் வெளிச்சம் உள்ளது. “நீ விசுவாசிக்கக் கூடுமானால், எல்லாம் கூடும்.” இப்பொழுது விசுவாசியுங்கள்.

138 அது உங்களுடைய சிந்தையை படிக்கும், மனோதத்துவமல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும்படியாக, நான் என்னுடைய முதுகை உங்களுக்குத் திருப்பிக் கொள்வேன். *இந்தப்* பகுதியைக் குறித்து என்ன? சகோதரியே, இது ஏஞ்சலிஸ் ஆலயத்தில் ஒருமுறை செய்யப்பட்டது. சகோதரன் டேவிட், உங்களுக்கு நினைவிருக்கும். இப்பொழுது நான்…நீங்கள் புரிந்து கொள்ளும்படியாக, நான் உங்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறேன், அது எனக்கு அங்குள்ள ஜனங்களோடு எந்தத் தொடர்பும் இல்லை என்பதையே காண்பிக்கிறது. நிச்சயமாகவே நீங்கள்—நீங்கள் புரிந்து-… நீங்கள் புரிந்து கொள்ளுகிறீர்கள் என்பதை நான் அறிவேன். பார்த்தீர்களா? ஆனால் ஜனங்கள் அறிந்துகொள்ளும்படியாக ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படி நான் தேவனுடைய கிருபையை வேண்டிக்கொள்கிறேன்.

139 ஆம், நான் ஒரு வாலிப நபரைக் காண்கிறேன், வாலிபப் பெண். அவள் தொலைவிலிருந்து வருகிறாள், அவள் இந்தத் தேசத்திலிருந்து வரவில்லை. அவள் மழை பெய்யும், ஏராளமான மரங்களும், பாசிகளும் உள்ள ஒரு தேசத்திலிருந்து வந்திருக்கிறாள், அவள் ஒரேகானைச் சேர்ந்தவள். அவளுக்குக் காக்காய் வலிப்பு நோய் உள்ளது. அவள் அங்கே அமர்ந்திருக்கிறாள். இயேசு கிறிஸ்து உங்களைச் சுகமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவளுக்காக நீங்கள் அதை ஏற்றுக்கொள்கிறீர்களா? சகோதரியே, எழுந்து நில்லுங்கள். வீட்டிற்குச் செல்லுங்கள், நான் பிசாசைக் கடிந்துகொள்கிறேன். நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? சரி.

140 இங்கே மையப் பாதையில், யாரோ ஒருவருக்கு விசுவாசம் உண்டு. சந்தேகப்படாதீர்கள். சகோதரன் ஷால்ட்ஸ் அவர்களே, நான் உங்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் காணும்படியாக நான் உங்களிடம் பேசுவேன். நான் அங்கே ஒருவரை அனுமதிக்கிறேன்…அங்கே ஜெப அட்டைகள் எதுவும் இல்லை, அதனால் அது—அது மிகவும் எளிமையானது, யாரையும் நேரடியாக அழைக்காமல், அவர்கள் அதைப் பார்க்கக்கூடும் என்பதற்காகத்தான்.

141 ஆம், அங்கே ஒரு மெலிந்த பெண்மணி இருக்கிறாள், அவளுக்குப் புற்று நோய் உள்ளது. அவள் இன்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டியவளாயிருந்தாள். அவள் ஒருவிதமான மெலிந்த பெண்ணைப் போன்று இங்கே முன்பக்கத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறாள். அவள் பெயர் செல்வி பீட்டர்சன். பார்த்தீர்களா? சரி, பெண்மணியே, தேவனில் விசுவாசமாயிருங்கள். பரலோகத்தின் தேவன் அந்தப் பிசாசை வேறு யாரும் காணக்கூடாத அளவிற்கு அதைக் கொல்லுவாராக. நீங்கள் தேவனுடைய குமாரனை

விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு அவரை விசுவாசிக்கிறீர்களா? அவரில் விசுவாசமாயிருங்கள், நீங்கள் செய்ய வேண்டியது அவ்வளவுதான். சரி.

142 நீங்கள் எல்லோரும் *இந்த* ஒரு வழியின் விசுவாசிக்க தயாரா? நான் இங்கே இந்த ஊழியக்காரனிடத்தில் பேசட்டும். நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? அங்குள்ள யாராகிலும் கூட, அவ்வாறு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஹூ-ஹூம். நான் உங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்படியாகவே. ஆனால் தேவனுடைய வல்லமை எல்லா மனோதத்துவக் காரியங்களையும் நிழலிட்டு, ஆவியின் மண்டலத்திற்குள்ளாக…ஆவி மண்டலத்திற்குள் செல்கிறது.

143 ஆம், எனக்குப் பின்னால் ஒரு—ஒரு ஸ்திரீ இருக்கிறாள், அவளோடுள்ள காரியம் என்னவென்று அவளுக்குத் தெரியாது. அவள்…ஓ, அந்தப் பரிதாபமான பெண்மணி! அவளுக்கு ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து அறுவை சிகிச்சைகள் நடந்துள்ளன. அது என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. அது என்னவென்று மருத்துவர்களுக்குத் தெரியாது. அவள் ஓய்வெடுப்பதற்காக இங்கே அரிசோனாவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறாள். அவள் லூயிஸியானாவைச் சேர்ந்தவள், அவளுடைய பெயர் திருமதி பியர்ஸன். சரி, திருமதி பியர்ஸன், எனக்குப் பின்னால் எங்கோ, எழுந்து நின்று என்னைப் பாருங்கள். நீங்கள் என்னைத் தேவனுடைய தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கிறீர்களா? எனக்கு உங்களைத் தெரியாது. அது உண்மையானால், உங்களுடைய கரத்தை அசைத்துக் காட்டுங்கள். நாம்—நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களாயிருக்கிறோம். கூறப்பட்டது உண்மையானது. அது சரியா? உங்களுக்கு என்ன நேர்ந்துள்ளது என்று மருத்துவர்களுக்குத் தெரியாது. அது உங்களுடைய நரம்புகள். உண்மையாகவே அமைதியாயிருங்கள், விசுவாசமுள்ளவர்களாயிருங்கள், அப்பொழுது நீங்கள் சுகமாக வீட்டிற்குச் செல்வீர்கள். தேவனில் விசுவாசமாயிருங்கள்! தேவனுடைய குமாரன் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

144 இப்பொழுது, *இந்தப்* பிரிவில் உள்ள ஒருவரைக் குறித்து என்ன? பின்னால் உள்ள நீங்கள் எல்லோரும் இங்கே விசுவாசிக்க தயாரா? பேட், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பதற்காக நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா? நீங்கள் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கையிலிருந்து வெளியேறி, ஒரு கிறிஸ்தவனாயிருப்பது அற்புதமானதல்லவா?

145 இங்கே ஒரு பெண்மணி இருக்கிறாள். அது ஒரு ஸ்திரீ, ஒரு மனிதன், ஒரு குழந்தை. அந்தப் பெண்மணி தேவனிடத்தில் தொடர்புகொண்டிருக்கிறாள். அவள் எனக்குப் பின்னால் இருக்கிறாள். அவளுக்கு ஒருவிதமான வயிற்றுக்கோளாறு

உள்ளது, அதற்குப் பிறகு அவளுக்கு—அவளுக்கு ஒரு பலவீனம் உண்டாகிறது. அவள் இங்கிருந்து வந்தவள் அல்ல, அவள் ஒரு பாலைவனம் போன்ற தேசத்திலிருந்து வந்தவள். ஆனால் அவள் கான்சாஸிலிருந்து வருகிறாள். அவருடைய கணவர் ஒரு ஊழியக்காரர். அவள்தான் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். எனக்கு உங்களைத் தெரியாது. பெண்மணியே, அது உண்மையென்றால், *இந்த* விதமாக உங்களுடைய கரங்களை அசைத்துக் காட்டுங்கள். சரி, ஐயா. சரி, வீட்டிற்குச் சென்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, சுகமடையுங்கள். நீங்கள் கர்த்தரை விசுவாசிக்கிறீர்களா?

146 இப்பொழுது கட்டிடத்தைச் சுற்றிலும், நீங்கள் கர்த்தரை விசுவாசிக்கிறீர்களா? நிச்சயமாக, அவர் இங்கிருக்கிறார்! இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அந்த விதவை ஸ்திரீ இருந்த இடத்தை எலியாவுக்குக் காண்பிக்க முடிந்த அதே தேவன், அதே தேவனால் நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்பதையும், உட்கார்ந்து, ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் எனக்குக் காண்பிக்க முடியும், ஏனென்றால் அது இயேசு கிறிஸ்துவின் ஆவியாயிருக்கிறது, நேற்றும் இன்றும் என்றும் மாறாததாயிருக்கிறது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நான் உங்களுக்காகப் பொதுவாக ஜெபிக்கையில், இங்குள்ள ஒவ்வொரு நபரும் உங்களுடைய கரங்களை ஒருவர் மற்றொருவர் மீது வைத்து, நீங்கள் ஒவ்வொருவரும் அதில் ஏதோ ஒரு காரியத்தை உடையவர்களாயிருப்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்படி விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசிகளாயிருக்கிறீர்கள், அப்படித்தானே? அப்படியானால் நீங்கள், “ஆமென்” என்று கூறுங்கள். [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] தேவனுடைய பிரசன்னத்தில், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் பிழையற்ற நிரூபணத்தில், உங்களுடைய கரங்களை ஒருவர் மீது ஒருவர் வைத்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள்.

147 எங்கள் பரலோகப் பிதாவே, காத்திருக்கும் இந்தக் கூட்டத்தை நான் உமக்கு அளிக்கிறேன். தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருக்கிற இந்த ஜனங்கள் யாவரும் ஒரு நல்ல சபை வீட்டைக் கண்டடைவார்களாக. கர்த்தாவே, சுகவீனமாயிருக்கிறவர்கள் சுகமடைவார்களாக. இப்பொழுதே, அவர்களுடைய வாழ்க்கையின்மேல் சாத்தானின் வல்லமை முறியடிக்கப்படுவதாக, நான் பிசாசைக் கடிந்துகொண்டு, இயேசு கிறிஸ்துவின் வல்லமை இந்தக் கூட்டத்தின்மேல் வந்து, ஒவ்வொரு சுகவீனத்தையும், ஒவ்வொரு நோயையும், ஒவ்வொரு துன்பத்தையும், ஒவ்வொரு சந்தேகத்தையும், எடுத்துப் போடும்படி வேண்டுகிறேன். கர்த்தாவே, அதை அவர்களிடமிருந்து அகற்றி, அவர்களைக் குணமாக்கும். நான் இதைத் தேவனுடைய

குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறேன்.

60-0310 எலியாவும் போஜன-பலியும்
மெய்ட்சன் ஸ்கோயர் தோட்டம்
பினீக்ஸ், அரிசோனா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.


மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


Voice Of God Recordings, India Office

19 (New No: 28) Shenoy Road, Nungambakkam

Chennai 600 034, India

044 28274560 • 044 28251791

india@vgroffice.org

Voice Of God Recordings

P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.

www.branham.org